நடராசன் (தலைவர்) சின்னசாமி-ஆறுமுகம்-கண்ணாயிரம்-சேகர்-துரைவேலன்-ஏழுமலை-சீமான்-மதுரை-பாபு-ராதா-வைத்தியலிங்கம், தி. ராமச்சந்திரன், ராமச்சந்திரன்.

ஜூலை 30

அரசு (தலைவர்) நாஞ்சில் நோவியர் தியாகராசன்-ராவணவேலு-அரங்கநாதன்-செங்குந்ததாசன், கணேசன்-சுப்பிரமணியம்-தனபாலன்-மோசஸ்-பாண்டுரங்கம்-ராமன்.

★

கிழக்கும் மேற்கும்

[ப. வாணன்]

சென்ற சில ஆண்டுகளாக, கிழக்கத்திய நாடுகளின் ஆத்மார்த்திகப் பெருமையையும், அவ்விஷயத்தில் மேற்கத்திய நாடுகளின் பிற்போக்கான தன்மையைப்பற்றியும், இந்திய உபகண்டத்தில் பேசப்பட்டு வருகிறது. அதுவும், இந்திய சுயாட்சி ஏற்பட்டபிறகு, கடந்த ஆறு ஆண்டுகளில் தேசியத் தலைவர்கள் அத்தனைபேரும் ஒருமுகமாக "இந்தியா எனும் இந்த பாரதவர்ஷத்தின் பெருமையைப்பாரீர்! நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் முன்னோர் காட்டிய வழியைக் காணீர்! நம்முடைய மூதாதையர் எழுதிப் போன இதிகாச, புராணங்களில் பொதிந்து கிடக்கும் உண்மைதான் என்னே! ஆத்ம சாந்திக்கு அவர்கள் காட்டிய வழிக்குச் செல்வோம், வருவீர்! இந்த உலகம் மாயை; இதை விட்டுப் போனபின் இருக்கும் இன்பமான ஆண்டவனிருப்பிடம் எப்பேற்பட்டது! 'ஆத்மார்த்திகம்' கண்டு பிடித்துக் கொடுத்த முன்னோர் அறிவு அளவிடற்பாலது. அவர்களுடைய பெருமையை மக்கள் கண்முன்னிருந்து மறைக்கப் பார்த்தனர், லௌகிக வாழ்வில் சிக்கிச் சிதையுறும் வெள்ளையர். இன்று, நம்மை நாமே ஆள்கிறோம். ஆகவே, நம் மூதாதையர் வழி செல்வோம், வாரீர்!" என்று நாள்தோறும் பறைசாற்றி வருகின்றனர்.

இவர்களைப் பின்பற்றி நாட்டில் பல துறைகளிலுமிருக்கும் பச்சோந்திப்பெரிய மனிதர்களும், சுயநலவாதிகளும் ஒத்துஊத ஆரம்பித்து விட்டனர்.

மேற்கத்தி நாடுகள் இந்த உலகத்தில் மனிதனுக்குத் தேவையானவைகளைக் கவனிப்பதோடு நின்றுவிட்டனர். ஆனால், இந்தியாவிற்கு அதன் பழப் பெரும் மனிதர்கள் விட்டுப்போன, வேத, புராண, இதிகாசங்கள், மனிதனுடைய ஆத்மத் திருப்திக்கான வழியைக் காட்டுகிறது. ஆத்மார்த்திகத் துறையிலே மேலை நாடுகள் இந்தியாவைப் பின்பற்றியே தீரவேண்டும். "நாங்கள் ஆத்மார்த்திகத்தைக் கொடுக்கிறோம். நீங்கள் வாழ்க்கை வசதிகளுக்குக் கண்டு பிடித்த கருவிகளைக் கொடுங்கள்!" என்று தற்பெருமை பேசி, மேற்கத்திய நாடுகளில் இருக்கும் மனிதக் கூட்டம் மனத் திருப்தியின்றித் தற்கொலை செய்துகொள்ள இருப்பதுபோலவும், இந்தியாவின் ஆத்மார்த்திக உதவி இல்லாவிட்டால், மேற்கே அழிவு ஏற்படும் என்றும் நாடெங்கும் கூறி வருகின்றனர்.

இந்த எண்ணத்திலேதான் ராதா கிருஷ்ணன் மேல்நாடு போனாலும், சி. பி. ராமசாமி அய்யர் அமெரிக்கா போனாலும், மற்றும், வட இந்தியத் தலைவர்கள் மேல்நாடுகள் செல்லும் போதும் "இந்தியாவின் ஆத்மார்த்திகத் தூதர்கள்" என்று அவர்களைப்பற்றிப் பெருமையாக இந்திய பத்திரிகைகள் போட்டுக் காண்பிக்கின்றன. இந்திய கலாச்சாரத்தின் தூதுவர்கள் என்று கூறிக்கொள்கின்றன.

ஐ. நா. சபைச்செயலாளர் ஹாமர் ஷீல்டுக்கு' பகவத் கீதையில் ஏற்பட்ட நம்பிக்கையை மகிழ்ச்சியோடு பிரசுரிப்பதும், ரஷ்யாவிலே ராமாயணம் மொழி பெயர்க்கப்படுகிறது என்று ஜம்பமாகக் கூறுவதும், தேசியத் தலைவர்களின் தின வேலையாகிவிட்டது.

உள்நாட்டிலேயும், 'பஜ கோவிந்தம் பாடு, மழை பெய்யும்!' 'ஆண்டவனைத் துதி, துன்பம் நீங்கும்!' என்றெல்லாம் அரசியல் தலைவர்கள், தங்களுடைய மக்கள் தேவையைப் பூர்த்தி செய்யமுடியாத தன்மையை மறைக்க, வேதாந்தம் பேசுகின்றனர்.

மந்திரிகள், பூர்ணகும்பத்தோடு வரவேற்கப்படுவதும், கவர்னர்கள் கோயிலைப் பார்க்கப் படை சூழப் போவதும், க்ஷேத்ராடனம் செய்ய ராஷ்டிரபதி புறப்படுவதும், நாம் ஒரு ஆட்சியின் கீழிருக்கிறோமா, அல்லது எங்காவது மடத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறோமா என்ற சந்தேகத்தை அடிக்கடி உண்டாக்குகின்றன.

கிழக்கத்திய நாடுகளின் ஆத்மார்த்திகத்தின் பெருமையைப் பேசும் தேசியத் தலைவர்கள், உண்மையில், அவர்கள் கூறுவதை நம்பித்தான் உரைக்கின்றனரா அல்லது அறிவிழந்து கிடக்கும் இந்திய உபகண்டத்து மக்களை, தற்பெருமையில் மூழ்க வைத்து, அவர்கள் கண்களை மூடுகின்றனரா என்ற பிரச்னை ஒருபுறமிருக்க, அவர்கள் கூறும் கிழக்கத்திய நாகரிகம் என்றால் என்ன (?) மேற்கத்திய நாகரிகம் என்றால் என்ன (?) என்று கவனிப்போம்.

கிழக்கத்திய நாடுகளின் 'ஆத்மார்த்திக நாகரிகம்' என்று நம் தேசியத் தலைவர்கள் எதைக் குறிப்பிடுகிறார்கள் என்று நாம் ஆராய்ந்தால், "மனிதனுடைய வாழ்க்கையில், வறுமை, பிணி, துன்பம், முடிவில் சாவு, இவைகள் தவிர்க்க முடியாதவைகள். அவை அத்தனையும் அவனவன், முன் ஜென்மத்தில் செய்த பாபத்தின் விளைவே. இந்தப் பாபத்திலிருந்து விடுபட்டுக் கடைத்தேற ஆண்டவனுக்குச் சேவை செய்து, பூவுலக வாழ்வில் ஆசையைத் துறந்து; வேத, புராண இதிகாசங்களில் கூறியுள்ளபடி நாலு வருணத்தாரும், அவரவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கடமையைச் செய்யவேண்டும், இந்த முறையைப் பின்பற்றினால், ஆண்டவன் அருளைப் பெற்று, மனிதன், அவன் பிறந்த பயனை அடைவான்!" இப்படித்தான், இந்திய நாகரிகத்திற்கு ஆத்மார்த்திகவாதிகள் தரும் பொதுவான விளக்கம், தெரிகிறது.

இந்த இந்திய கலாச்சாரவாதிகள் "மேற்கத்திய நாகரிகம், எப்படி? மனிதன் எப்படிப் பிறந்தான்? எப்படி இறக்கிறான்? இறந்த பின் என்னவாகிறான்? அவனுக்கு இதத்தில் ஏற்படும் துன்பங்களுக்குக் காரணம் என்ன? கர்ம வினையின் பலனை அவன் அனுபவித்துத்தானே ஆகவேண்டும்!" என்பதைப்பற்றி யெல்லாம் கவலைப்படாமல், அன்றாடம் மனிதனுடைய வாழ்க்கைக்கு தேவைப்பட்ட விஷயங்களையே தத்துவமாகக் கொண்டிருக்கிறது என்றும், ஆகவேதான், மேற்கத்தி நாடுகளில் மனிதன் இயந்திரத்தோடு இயந்திரமாய் வேலை செய்து, அதன்

அடிமையாக் வாழ்ந்து, மனச்சாந்தியும் மறு உலக இன்பம் அடையாமலும் இறக்கிறான்" என்றும் கூறுகின்றனர்.

அவர்களுடைய இந்த வாதத்தை ஆராயுமுன் நாகரிகம் என்றால் என்ன என்பதை நாம் தெளிவுப்படுத்திக்கொள்ளவேண்டும்.

மனிதன் ஆரம்ப காலத்திலே மிருகத்தோடு மிருகமாயிருந்தான். ஆண்டுகள் செல்ல, செல்ல அவனுடைய வாழ்க்கையில் மாறுதல் ஏற்பட்டது. உலகத்தின் பல்வேறு பாகங்களிலும் வாழ்ந்த மக்கள், தங்கள், தங்கள் பூபாகத்தில் இருக்கின்ற தட்ப வெட்ப நிலைக்கு ஏற்ப, பழக்க வழக்கங்களை உண்டாக்கினர். அறிவை உபயோகித்து வாழ்க்கைத் தேவைகளை பூர்த்திசெய்யும் புதிய புதிய கருவிகளைக் கண்டு பிடித்தனர். இப்படி மனிதன் முன்னேறியபொழுது சுற்றுச் சார்பால் அவனுக்கு உண்டான தொல்லைகள் அதிகம். அவைகளையும் மீறி அவன் முன்னேறியிருக்கிறான். வரலாற்றிலே காணப்படும் கற்காலம், பித்தளைக் காலம், இரும்புக் காலம், நீராவிக் காலம், மின்சாரக் காலம் முதலியவைகள் மனிதன் படிப்படியாக முன்னேறிய விதத்தைவிவரிப்பதேயாகும். நாகரிகம் என்பதுபல்வேறு, மனித இனங்கள் தங்கள் தங்கள் வாழ்க்கை வசதிக்கு ஏற்ற கருவிகளைக் கண்டுபிடித்த தன்மையிலே தான் காணக்கிடக்கிறது. இயந்திரங்களும், புதியபுதிய கருவிகளும் அவ்வப்போது மனிதனுக்கு ஏற்பட்ட ஆசை, தேவை, ஆராய்ச்சி, ரசிப்புத்தன்மை இவைகளால் உண்டாகிக்கொண்டே இருக்கின்றன.

இப்படி இந்த உலகத்திலே இயற்கையில் இருக்கும் இடைஞ்சல்களைத்தாண்டிமனிதன்அவனுடைய சக்தியையும், அறிவையும் பயன்படுத்திச் செய்த மாறுதல்களை 'மனித வளர்ச்சி' அல்லது 'நாகரிகம்' என்று கூறப்படுவது.

அப்படியானால் மேலை நாடுகளின் நாகரிகத்திற்கும், கீழ் நாடுகளின் நாகரிகத்திற்கும் இருக்கும் வித்தியாசம் என்ன?

கீழ் நாடுகளின் நாகரிகம், இன்னும் மனிதனுடைய உழைப்பின் மூலம் சக்தியைப்பெறுகிறது.

மேல் நாடுகள் இயந்திரம் மூலம் சக்தியைப் பெறுகின்றன.

கிழக்கத்திய நாகரிகம்மனிதனின் உழைப்பைக்கொண்டே அவனுக்குத்தேவையான வசதியைப்பெறச் செய்கிறது.

மேற்கத்திய நாகரிகம் மனிதனின் உழைப்பு மாத்திரமல்லாமல் அங்கே கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்களையும், மின்சாரத்தையும், இன்னும்சொல்லப்போனால் அணுச் சக்தியையும் கொண்டு அவர்களுடைய வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்கின்றது.

இதுதான் இன்றைய தினம்மேற்கத்திய நாகரிகத்திற்கும் கிழக்கத்திய நாகரிகத்திற்கும் இருக்கும்வித்தியாசம்.

சென்ற இருநூறு ஆண்டுகளில் மேலைநாடுகள் நாகரிகப் பாதையில் வெகுதூரம் சென்றுவிட்டன. மறுமலர்ச்சிக் காலத்திற்குப் பிறகு கண்டு பிடிக்கப்பட்ட இயந்திரங்களும், அதைத் தொடர்ந்து ஆராய்ச்சியில் விளைந்த ஆயிரக்கணக்கான நூதன விஞ்ஞான கருவிகளும் மனித வாழ்க்கைக்கு அதிகமான வசதிகளைக் கொடுத்திருக்கின்றன. இருநூறு ஆண்டுகளுக்கு முன்

பிருந்ததைப்போல் பன் மட
செல்வம் பெற்று இன்பமடை
வாழ்கின்றனர் மேல் நாட்டார்.

இந்தநோக்கிலேதான் கிழக்க
நாடுகளின் "வாழ்வது மா
சாவது திண்ணம். கர்ம வினை
தவிர்க்க முடியாது" என்ற வே
தங்களை எடுத்துக்கொண்டு ந
கின்றனர், நம் தேசியத் தலைவ

தற்பொழுது இருக்கின்ற
அரசியல் நிலை காரணமாக, இ
அரசியல் வாதிகள் பேசும்வேதா
விளக்கங்களைக் கேட்டுக் கொ
சும்மா இருக்கலாம், மேலை
ராஜதந்திரிகள். அவனவன்
டிலே அவனவன் விருப்ப
இருக்கட்டும் என்ற பெருந்த
யில் ஆத்ம விஷயங்களில் நீ எ
இருந்தாலும், அரசியலில்
தரவு கொடுக்காமலிருந்தா
போதும்" என்று இவர்களை மே
யிலேற்றிவிட்டு அவர்கள் த
வேலையைப் பார்க்கப் போ
கின்றனர்.

ஆனால் உண்மையில் கிழக்கத்
நாடுகளின் நாகரிகம் மேற்கத்தி
களுக்குத் தேவையா?

தேவையா தேவையில்லையா
பதற்கு, 'கர்மவினையையும், மோ

கவியரசர் பாரதிதாசன் நூல்கள்

குயில் தொகுதி	5—8—0
குடும்ப விளக்கு	3—8—0
கவிதைகள் இரண்டாம் தொகுதி	2-12—0
காதலா? கடமையா?	2—4—0
இரணியன் இணையற்றவீரன்	1—0—0
இசையமுது முதற் பகுதி	0—8—0
இரண்டாம் பகுதி	1—0—0
புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தொகுப்பு	1—0—0
நீதிமன்றத்திலே தி. மு. க. தலைவர்கள்	0—12-0
சிறைக்குள் கருணாநிதி	0—8—0
கார்க்கியின் கதைகள் மிக அழகிய பதிப்பு	5—0—0

தென்னாடு—கா. அப்பாதுரை பிள்ளை, அச்சில்
ஸ்டாலின்—எஸ். ஆர். கே. ,,
வித்யா ஸ்டாலின்—எஸ். ஆர். கே பரிசு பெற்ற நாவல்.

எல்லாத் தமிழ் நூல்களும் எங்களிடம் கிடைக்கும் வணிகர்களுக்குத் தக்க கழிவு தரப்படும்.

தேவைக்கு:—

மலர் நிலையம்

133, பிராட்வே, சென்னை-1.

லோகங்களையும்' தத்துவமாகக்
ண்ட கிழக்கத்திய தத்துவம்
நாடுகளுக்குப் புதிதா என்
விளக்கினாலே, பதில்கிடைத்து
.

ன்றைக்கு நம்தேசியத் தலைவர்
ளாது வழங்கும்கிழக்கத்திய
ாந்தம் இருக்கிறதே, அதன்
தாக்கள் ஐயாயிரம் ஆண்டு
கு முன் இந்திய உபகண்டத்
பிழைப்பைத் தேடிவந்த
வர்க்கத்தார் கொடுத்தவை
ஆரியர்களுக்கு பூர்வீகம் மத்
ஆசியா. அங்கிருந்துபுறப்பட்ட
கூட்டம் தென்கிழக்கே இந்
உபகண்டம் நுழைந்தது. மற்
கூட்டம்மேற்கே ஐரோப்பிய
ம் நுழைந்தது.

ந்தியாவிற்குள் நுழைந்தபோது
நேரத்திலே இங்கிருந்த
கூட்டம் இயற்கையோடு
ாடிப், போராடி. நாகரிகப்
தயிலே சென்றுகொண்டிருந்
மஹெஞ்சோதாரோ,
ப்பா முதலியவை வடநாட்டி
பின்னால் பிரகாசித்த காவிரிப்
ட்டினம், கொற்கை, முசிரி முத
மிழ நகரங்களும் இந்திய உப
த்து மனிதன் எந்தளவு வேக
ாகரிகப்பாதையிலே சென்று
டிருந்தான் என்பதை தெரி
த்துகின்றன,

யற்கை கொடுத்த தொல்லை
மீறி, உலக வாழ்க்கையை
மாகக் கழிக்க, தேவைப்பட்ட
களைக் கண்டுபிடித்துக்கொண்
த நேரம். அப்பொழுதிருந்த
ன் உழுது பயிராக்கி, உண்ண
வு தயாரித்திருந்தான். உடலை
மெல்லிய பட்டாடை தயாரித்
. கலம் ஏறி வணிகம் செய்
. காட்டை மேடாக்கிக் கட்
அழகிய அரண்மனைகளில் குடி
னான். உலக வாழ்க்கை அவ
கூத்தும், கொண்டாட்டமு
இருந்த நேரம்.

ந்த நேரத்திலேதான் ஆரியர்
ள நுழைந்தனர். நுழைந்து,
திய ஆசியாவிலே இருந்த
ாமையிலும்; பயத்திலும் ஏற்
காட்டுமிராண்டி தத்துவங்
பரப்பினர்.

மனித இனத்திலே எல்லோரும்
ஒருமுகமாக, ஒரேமாதிரி
மாக வாழமுடியவில்லை? ஏன்

சிலர் வாழ்க்கையின் இளம் பிராயத்திலே இறக்கின்றனர். ஏன் குழந்தைகள் இறக்கின்றன? சிசு எப்படி உண்டாகிறது? ஏன் இறக்கிறது? உயிரை நம்மால் உண்டாக்கவும் முடியாது; அழிக்கவும் முடியாது. பிணியை நாம் தவிர்க்க முடியாது. துன்பத்தை நாம் ஓட்டமுடியாது. எல்லாம் ஆண்டவன் செயல். அவன் ஆட்டிப் படைக்கிறான்! அவனன்றி ஓரணுவும் அசையாது!" என்றெல்லாம் வேதாந்தம் பேசினர்.

நாகரிகத்தின் ஆரம்பகாலத்திலே இருந்த அந்த மக்களுக்கு, ஆரியர்கள் கூறிய விளக்கம் சரியென்று பட்டதிலே தவறில்லை. கிரஹணத்தைப்பற்றி நமக்கு. நம்முடைய விஞ்ஞான ஆசிரியர்கள் விளக்கம் கூறி இருக்கின்றனர். ஆகவே நாம் சந்திரனைப் பாம்பு மறைக்கிறது என்றால் நகைப்பதோடு விடுகிறோம்.

ஆனால் அன்றைக்கிருந்த மனிதன் அவனுடைய அறியாமையிலே ஆரியர் கூறியதை ஒத்துக்கொண்டான். ஒத்துக்கொள்ளும்படி செய்யப்பட்டான். அதன் பலன் 'கர்மவினை' தீர ஜாதிகள் உண்டாயின. ஆரியர்களுக்கு திராவிடக் குடிமக்கள் தாசர்களாயினர்.

வேதம், புராணம், இதிகாசம், ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி ஹிந்து மதம் நிலையானது.

இந்திய உபகண்டத்து மனிதனுக்கு இருந்த நாகரிக அறிவு அடியோடு அழிக்கப்பட்டது. "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்று வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு துன்பங்களையும் கர்ம வினையின் பலன் என்று எண்ணி மதாசாரப்படி பக்தியோடு பூசை செய்ய ஆரம்பித்தான். ஆரியர்கள் வளமாயினர்.

13-வது நூற்றாண்டுவரை இந்திய உபகண்டம், இடையில் ஏற்பட்ட புத்த மார்க்கத்தையும் சாப்பிட்டு விட்டு ஹிந்து வர்ணாச்சிரம தர்மப் பாதையிலேயே சென்றுகொண்டிருந்தது. அதற்கு பின்னால் மாமதிய மார்க்கம் தழுவியதுபோக பெரும்பாலான மக்கள் வேத மார்க்கத்திலேயே இன்னும் இருந்தனர்.

17-வது நூற்றாண்டிலே வெள்ளையன் நுழைந்தான்.

ஆரிய மார்க்கத்திற்கு அன்றே அரியாசனம் கிடைத்தது.

இந்தியா பூராவும் ஆட்சி செய்த முதல் அரசாங்கம் வெள்ளையனுடையதுதான்.

நாட்டுமக்களுடைய மனவளர்ச்சியிலோ, மதாபிமானத்திலோ ஆங்கிலேயன் அக்கறை கொள்ளவில்லை. மிகத் தந்திரமாக, ஹிந்துமத மயக்கத்தில் ஆழ்ந்து கிடந்த மக்களை ஏமாற்றினான். ஆரியமார்க்கத்தின் அடிப்படைத் தத்துவங்களையே சட்டங்களாக்கினான். மத விஷயங்களில் அரசாங்கம் தலையிடாது என்று கூறி, ஆரியமார்க்கத் தலைவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற்றான்.

அவனுடைய அரசாங்கத் தேவைகளுக்கேற்ப, சில கல்விக்கூடங்களை அமைத்து ஆண்டுதோறும் குமாஸ்தாக்களையும், அதிகாரிகளையும் உற்பத்தி செய்துகொண்டான்.

இப்படி அவனுடைய இருநூறு வருஷ ஆட்சிக்குப் பிறகு, இந்த ஆரிய நாகரிகம் பாதுகாப்போடு இன்றைய தினம் நம் தேசியத் தலைவர்கள் கையில் வந்து சேர்ந்திருக்கிறது.

இந்தப்பழங்குப்பையை எடுத்துக் கொண்டுதான் நம் வேதாந்திகள் மேல்நாடு செல்கின்றனர்.

ஆனால் மேலை நாடுகளில் வாழ்வோர் எவ்வளவு உயரத்திற்கு சென்று விட்டனர் தெரியுமோ!

ஆரிய நாகரிகம் இந்தியாவிற்குள் நுழைந்தநேரத்தில்தான் ஐரோப்பாவிலும் நுழைந்தது.

கிரேக்க, ரோம சாம்ராஜ்யங்களின் பெருமைகள் அழிந்து கொண்டிருந்த நேரத்தில் ஆரிய நாகரிகம் மக்களை ஆட்கொண்டது.

அதைத் தொடர்ந்து, மதத்தை சீர்திருத்தம் செய்து மக்களைக் காட்டு மிராண்டிக் கொள்கைகளிலிருந்து மீட்கப் பாடுபட்டார் இஸ்ரேலில் தோன்றிய யேசு. யேசு கூறிப் போனதைத் தொடர்ந்து

> "ஆலயங்களைச் சுங்கச்சாவடிகளாக்கிவிட்டார்கள், மாபாவிகள். ஆலய ஊழியருள் பெரும்பாலோர் கள்ளராகவே இருக்கின்றனர். இத்தியர் உறையும் இடத்தில் ஈசன் களித்திருப்பனோ?"
>
> —திரு. வி. க.

முன்னேறுவதற்குள் அவருடைய பெயரை வைத்துக் கொண்டே யேசுவின் மொழிகளைச் சிறைப் போட்டு அதன் அர்த்தங்களை சுருக்கி மதமாக்கி விட்டனர் சிலர்.

அதன் பலன் கிட்டத்தட்ட 15 நூற்றாண்டுகள் ஆண்டவனை துதித்து விட்டு எப்பொழுது சாவோம் என்று காத்துக் கொண்டிருந்தனர் மக்கள்.

15-ம் நூற்றாண்டு பிறந்தது. அன்றே ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஒளியும் தோன்றியது.

"அவனன்றி ஓரணுவும் அசையாது;. கடவுள் இட்ட விதிப்படி தான் எல்லாம் நடக்கும்!" என்ற முன்னேற்றத்திற்குத் தடங்கலாக இருந்த தத்துவத்தை உடைத்தெறிந்தனர்.

"எங்களுக்குப் பல விஷயங்களின் ஆரம்பமும், முடிவும்; காரணங்களும், விளக்கங்களும் தெரியாமலிருக்கலாம். ஆனால் நாங்கள் எல்லாவற்றையும் ஆராயப் போகிறோம்" என்று புறப்பட்டனர் அறிவு விளக்கம் பெற்ற சிலர்.

"அம்மை வருவது ஆண்டவன் விதியில்லை — இதோ காரணம் — இதோ மருந்து!" என்றனர்.

"காலரா கடவுள் கட்டளையில்லை — மனிதனுடைய அசுத்தமே காரணம்- இதோ மருந்து!" என்றனர்.

"உலகம் உருண்டையானது. கிரகங்கள் தனித்தனி. சந்திரனுக்கு வெளிச்சமில்லை. சூரியன் ரதகஜ துரகபதாதிகளோடு புறப்படுவதில்லை. உலகம் சுழல்கிறது!" இப்படி விஞ்ஞான உண்மைகளைக் கண்டுபிடித்து மதவாதிகள் மக்களை ஏமாற்றி வந்த தத்துவங்கள் எல்லாவற்றையும் உடைத்தெறிந்தனர்.

"ஏன் நடக்கிறாய்—இந்த நீராவி இயந்திரத்தில் ஏறு!" என்றனர் விஞ்ஞானிகள். "ஐயோ, சாத்தானின் செயல் என்றனர், மதவாதிகள்.

"இதோ பெட்ரோல் — ஓட்டு இந்த காரை!" என்றனர் விஞ்ஞானிகள்.

"அடபாவிகளே! ஆண்டவன் கடைசிகாலத்திலே உலகத்தை அழிப்பதற்காக வைத்திருக்கும் அந்த எண்ணெயை எடுத்து விட்டீர்களே!" என்று அலறினர் மதவாதிகள்.

அதிகாரத்திலிருந்த மதவாதிகள் கொடுத்த கடுந்தண்டனைகள் எதையும் பொருட்படுத்தாமல் முன்னேறினர் அறிவொளி பெற்றவர்கள்.

வறுமையும், பிணியும், துன்பமும் மனித வாழ்க்கையில் கர்ம வினையால் ஏற்பட்டதல்ல. விஞ்ஞான கருவிகளின் உபயோகத்தால் நாட்டில் செல்வம் கொழிக்கச் செய்து வறுமையை அடியோடு ஒழிக்கலாம்; மருந்துகளால் பிணியை ஓட்டலாம்; அறிவைப் பரப்பித் துன்பத்தை ஓட்டலாம்; என்றெல்லாம் விளக்கம் தந்தனர், மறுமலர்ச்சியடைந்த அறிவாளிகள். மக்கள், அவர்கள் வழி சென்று இன்பம் கண்டனர். 19-வது நூற்றாண்டுக்குப் பின் மேற்கத்திய நாகரிகம் வேகமாக வளர்ச்சியடைந்து நீராவி, மின்சார வசதிகள் கண்டுபிடிக்கப் பட்டவுடன் உச்ச நிலைக்கு போய்க் கொண்டிருக்கிறது.

விஞ்ஞான ஆராய்ச்சிகள் மதத்தின் அடிப்படைக் கொள்கையான கர்மாவையும் கடவுட் கொள்கையையும் உடைத்தெறிந்து விட்டபோதிலும், அதற்காக மனிதத் தன்மையற்றுப் போகவில்லை.

சுமுகமான மனித வாழ்க்கைக்குத் தேவையான கொள்கைகளை மேல் நாட்டாரும் கடைப் பிடித்தே வருகின்றனர்.

உண்மையைக் கூறுவது; மற்றவர் பொருளை அபவாதமாகத் திருடுவது; வீணை மாற்றானைக் கொலை செய்வது; பொய்சாட்சி சொல்வது; பிறன் இல்லாளை இச்சிப்பது இத்தவறுகளும் இன்னும் எல்லாவித ஒழுக்கங்களையும் அவர்களும் கடைப்பிடித்துத்தான் வருகின்றனர்.

ஆனால் கடவுளுக்கோ, கர்ம வினைக்கோ பயந்து அல்ல. மனித வாழ்வின் சுகத்திற்கு மனிதனுக்கு மனிதன் நடந்து கொள்ள வேண்டியது "தேவையான ஒழுக்கங்கள்" இவை என்ற உயர்ந்த மனப்பான்மையில் தான்!

மொத்தமாகக் கூறினால் மேற்கத்திய நாகரிகம் "எந்த விஷயத்தையும் ஆதாரமின்றி ஒத்துக் கொள்வதில்லை. அதே நேரத்தில் தங்களுடைய அறிவுக்கு எட்டாத விஷயங்கள் இருக்கின்றன என்பதையும் ஒத்துக் கொள்கிறது."

அப்படிப்பட்ட விஷயங்க ஆண்டுகள் செல்லச் செல் ஆராய்ச்சிகள் மூலம் வெளிப்படு என்ற தளராத நம்பிக்கையில், தெரிந்ததை வைத்துக் கொண் இந்த உலகத்தில் இன்பமாக, அ வும் மனிதனுக்கு மனிதன் வித் யாசமில்லாத சமமான இன்பத் அனுபவிக்கும் திட்டத்தில், மே நாட்டார் செல்கின்றனர்.

நாகரிக வரலாற்றில் அவ்வள தூரம் முன்னேறி இருப்பவர்க டம் போய், நம் தேசியத் தலைவர் கள் மறுபடியும் "வேதம், கர்ம கடவுள் அருள், மோட்சம், நரகம்" என்றால் நகைக்காமல் என்ன செய் வார்கள்.

இந்த மாதிரி அறியாமைத்தத் வங்களை உடைத்தெறிந்துவிட்ட தானே, இன்று அவர்கள் முன் னேறியிருக்கிறார்கள். மதவாதி களின் ஏமாற்று வித்தைகளை தாண்டி, மனிதாபிமானிகளி அறிவு உலகத்திற்கு சென்றவர்க டம் போய் "கிழக்கில் இருந் வரும் வேதாந்தம் காணீர்!" என் றால், மேலை நாட்டான் "எனக் வேதாந்தம் தேவையில்லை. எங்க நாட்டின் விஞ்ஞான வளர்ச்சியி நாங்கள் சுகமான வீட்டில் வச யோடு வாழ்கிறோம். எங்களுக் மனச்சாந்திக்கு கார் இருக்கிறது பங்களா இருக்கிறது; ப்ளே இருக்கிறது!" என்றெல்லாம் சொ லாமல் வாஷிங்டனில் வேலைபார் கும் அமெரிக்காக்காரன், குடும்ப தோடு ஸ்பெயின் நாட்டுக் பொழுது போக்காகவந்து மக் மனைவியோடு உல்லாசமாக சுற் திரும்பிப் போகிறான்.

மேல்நாட்டார் கீழ்நாட்டுத்தத் வங்களைவிட உயர்ந்த ஸ்தான சென்றுவிட்டனர் என்பது நம கலாச்சாரத் தூதுவர்களுக் தெரிந்துதானிருக்கிறது. இருந் வெள்ளையனிடமிருந்து பெ ஆட்சியைத் தாங்களே வைத் கொள்ள இந்த முறை தேவை படுகிறது.

ஆரியக் கலாச்சாரத்தில் மூழ் இருக்கும் பெரும்பான்மையான தி உபகண்டத்து மக்கள் அறி கத்தின் பக்கம் அழைத்து வரப்ப வில்லை.

மேல்நாட்டு நாகரிகத்தைக் கன்

ஆச்சரியப்படுகின்றனர் அந்தநேரத்திலே, வெள்ளைக்காரன் செய்ததுபோல், இந்திய கலாச்சாரத்தை தாங்களும் காப்பாற்றப்போவதாகக் கூறி, பாமர மக்களிடம் போய் ஹிந்துமதம், பழம் பெருமை இவைகளை வானளாவப் புகழ்கின்றனர்.

மக்களோ, “நாம் அப்பேற்பட்டவர்களா!” என்ற அகமகிழ்ச்சியில் பழைய வழியில் இன்னும் திடத்தோடு செல்கின்றனர்.

“அரசாங்கம் என்ன, செய்யும்? எல்லாம் நம் தலைவிதி; கர்மவினை!” என்கின்றனர் மக்கள்.

“ஆமாம்! நாங்களென்ன செய்வோம்! பாடுங்கள் பஜகோவிந்தம்—மழை பெய்யும்!” என்கின்றனர் ஆளவந்தார்கள்.

இப்படி உள் நாட்டிலேயும் தங்கள் கடமையைச் செய்யாததோடு, மக்களைத் தங்களைத்தாங்களே ஏமாறச்செய்து படுகுழியில் தள்ளுகின்றனர், நம் தேசியத் தோழர்கள்.

இயற்கையோடு நடந்த — மனித சமுதாயத்தின் பெரும் போராட்டத்தில் வெகுதூரம் முன்னேறி விட்டனர், மேல்நாட்டார். மனிதனுக்கு ஏற்படும் துன்பங்களைப் போக்கி இவ்வாழ்வு இன்பமாகும் வழிவகையைக் கண்டு பிடித்திருக்கிறது மேற்கத்திய அறிவாளிகள் சமுதாயம். நமக்கு மனித வாழ்வில் அக்கறையிருந்தால் நாமும் சீக்கிரம் அவர்களோடு போய்ச் சேரவேண்டும். எல்லோரும் ஒன்று சேர்ந்து மேலும் இன்ப வாழ்வை அடைய முயற்சிக்க வேண்டும்.

அந்த வழியில் செல்ல முட்டுக்கட்டையாக நிற்கும் இந்தத் தேசிய கபட வேதாந்திகளோடு நாம் மோதிக்கொள்ள வேண்டியதில்லை. அவர்கள் ‘காயாக’ உபயோகப்படுத்தும் மக்களிடம் செல்லவேண்டும். மக்களிடம் அறிவுத்தீபம் எடுத்துச் சொல்லப் பெற்றால், இந்தக் கபட அரசியல் வேதாந்திகள் தானே ஓடுவர்.

அந்த வேலையைச் செய்ய ஆரம்பிக்குமுன் நாம் எப்பேற்பட்ட மக்களிடம் செல்கிறோம் என்பதையும் தெரிந்துகொண்டு செல்லவேண்டும்

சமீபத்திலே நான் வட ஆர்காடு மாவட்டத்திலே ஒரு கிராமம் சென்றிருந்தேன். பஸ் பாதைக்கு ஏழு மைலில் மலைகளுக்கிடையில் ஒரு வித சுகாதார வசதியுமின்றி இருக்கும் அந்தக்கிராமத்துமக்கள் முதல் நாளிரவு பூராவும் ‘நளாயனி மகத்துவம்” கதை கேட்டனர்.

சூரியனைநிறுத்தியநளாயினியைப் பற்றி மறுநாள் பூராவும் சொல்லிசொல்லி பக்தியால் பூரித்துப்போயினர். மறுநாள் மாலை ஒரு வீட்டில் மேளம் அடித்தது. நாதஸ்வரம் வாசிக்கப்பட்டது. “ஏன்........?” என்றேன். “சாந்தி முகூர்த்தம்!” என்றனர். வேடிக்கையாக அந்த வீட்டுக்குச் சென்றேன்.

ஜன்னல் ஓரத்தில் நின்றுகொண்டிருந்த பெண் நகர்ந்தாள். “கட்டு மஸ்தான உருவம். இளமையில் பெண்களுக்கு வரும் . அவ்வளவு அழகும் ஒருங்கே அமைந்து. கரும் கூந்தல் தொடையில் வந்து விழ, சிவந்த அதரங்களில் சிங்காரவர்ணங்கள் பூசியிருந்தாள்.” இவ்வளவையும் வீட்டிற்குள் நுழைந்த மறுகணமே கண்டுபிடித்தேன். திராவிடப் பெண்ணின் அழகைக் கண்டு பூரித்தேன். மறு நிமிடம் பெண்ணின் பெற்றோர்கள் மாப்பிள்ளையைக் கூப்பிட்டனர். மாப்பிள்ளை வெளியே வந்தான். அந்தநிமிடமே எனக்கு நெஞ்சில் நெருப்புச் சுட்டது. அந்தோ! பரிதாபம்! அவன் ஒரு குஷ்டரோகி!

தலை தெறிக்க வெளியேவந்தேன்.

“இந்தக்குஷ்டரோகிக்கா, இந்தப் பெண்......!” என்றேன் என் கண்ணீரைத் துடைத்த வண்ணம்.

“என்னுங்க செய்வது. பெண்ணுக்கு மூன்று வயது இருக்கும் போது திருமணம் செய்தோம். அவளுக்கு வயது வந்து ஆளாவதற்குள் பையன் இந்தகதிக்குவந்து விட்டான். இனி என்ன செய்வது? அது அவள் தலைவிதி! கர்மவினை!!” என்றார் பெண்ணின் தகப்பனார். ஒரு நிமிஷம், நாமெல்லாம் இறந்திருக்கக் கூடாதா? இல்லை-மேல் நாட்டில் இருந்திருக்கக் கூடாதா? என்று நினைத்தேன். ஆனால் இந்த நைந்த சமுதாயத்தில் நாம் பிறந்து விட்டோமே என்று எண்ணி அந்தக் கிராமத்தை விட்டுப் புறப்பட்டு விட்டேன்.

இப்பேற்பட்ட மக்களைத் திருத்த வேண்டும் திருத்திக்கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளாக முன்னேறியிருக்கும் மேற்கத்தி நாகரீகத்தோடு போய்ச் சேரவேண்டும். பயணம் தொலைவானதுதான் — கடினமானதுகூடத்தான். ஆனால் தவிர்க்க முடியாதது — மிகமிகத் தேவையானது!

★

நான்காம் ஆண்டில்......!

நான்காண்டு காலத்தில் நாவின் துணையொன்றால்
தூங்காது நாம்வளர்த்த தூயவுரு—ஓங்காமல்
வீழ்த்தி திட்டமிடும் வீணரின் ஆர்ப்பாட்டம்
தாழ்த்துவதில் என்ன தவறு?

வாய்த்துடுக்குக் கொண்ட வடநாட்டார் தம்திமிரைச்
சாய்த்திடுவோம் என்று சமர்தொடுத்துத்—தேய்த்துச்
சிறைக்கோட்டஞ் சென்ற திருவிடத்துச் செவ்வா!
மறக்காது தாயகம் நற் மாண்பு!

சதிகாரக் கூட்டத்தார் தந்திரத்தால் பெற்ற
அதிகாரத் தீயின் அவியாய்ப்—பதினொருவர்
ஆவியினை ஈந்தார்; அவர்நாமம் வாழ்ந்திடுக!
சாவிலும் இஃதன்றோ சால்பு!

கட்டிளங் காளை கணக்கின்றி முன்செல்ல
விட்டோமே வாய்ப்பையென வேதனைப்—பட்டோரே!
மாய்ந்தோமென் றெண்ணி மகிழ்வோரைத் தீர்க்காமல்
ஓய்ந்துவிட்டால் ஏதுமக்கு உயர்வு?

—கருணானந்தம்.

'அன்னை'யை இழந்தோம்

செந்தமிழ்ச் செல்வமாம் திரு. வி. க. அவர்களை, தீ விழுங்கி, சாம்பலாக்கிவிட்டது எனும் செய்தியை நினைக்க, சிந்தை சுழல்கிறது, நமக்கு.

பண்மொழியில், பைந்தமிழைக் குழைத்து, மாற்றாரும் மயங்க, அன்புரையும், பண்புப்பாதையும் காட்டி நின்ற, நடமாடும் தமிழ்ச் சின்னத்தை, தாயகம் இழந்துவிட்டது.

திரு. வி. க. அவர்களை, தமிழ்ப் பெரியார் என்றழைத்து, மகிழ்ந்தோம், நாம். அவரது சித்ரமணி நடையும், புயல் குரலும் இனிக் காணக் கிடைக்காது—தமிழகத்தில். தடியூன்றி, தள்ளாடியபடி, வருவோர் போவோரிடமெல்லாம், தன் ஆசைகள் முழுவதையும் கொட்டிக்கொண்டிருந்த அன்புருவத்தை, ராயப்பேட்டையில், இனி நாம் காணமுடியாது. சாது அச்சுக்கூடத்திலிருந்தபடி, தமிழகத்தின்பால்; அன்பும் ஆர்வமும் செலுத்திவந்த தொழிலாளர் தலைவர், போய்விட்டார்—தமிழ், தன் 'மூத்தமைந்தனை!' இழந்துவிட்டது—தமிழகம், ஒரு 'தலைவரை' இழந்துவிட்டது — நாம், நம் 'அன்னை'யை இழந்துவிட்டோம்.

அவரது, அன்புத் திருவாயால், நம்மையெல்லாம் பெற்ற 'அன்னை' என்று அடிக்கடி அழைத்து களிப்பார். "நாயக்கர், சுயமரியாதை இயக்கத் தந்தை. நான், அன்னை. குழந்தை, தாயைவிட்டு, தந்தையிடம் வளர்கிறது. எங்கிருந்தாலென்ன? என் குழந்தைதானே!" என்று எத்தனையோ முறை வெளியிட்டிருக்கிறார். நாமும் அவருக்கு, அந்த மரியாதையை மனமுவந்து, அளித்தோம். அவரும், ஆனந்தத்தோடு, அம் மரியாதையைப்பெற, விழைந்தார்.

அவர் உயிர் துறந்தபின் நடைபெற்ற சவ ஊர்வலத்தில், மாறுபாடின்றி எல்லாக்கட்சியினரும் கலந்துகொண்டனராம்—தமிழகத்தில் இத்தகைய காட்சி, அரியதொன்றாகும். காரணம், அவர், காங்கிரசை வளர்த்தவர் — தொழிலாளர் சங்கத்தை உண்டாக்கியவர் — முற்போக்காளர்களைக்கண்டு அகமகிழ்ந்தவர். அதோடு, யாரைச் கண்டாலும், எங்கு சென்றாலும், "அன்பால் வாழ்! அன்பே தமிழ்! அன்பே சைவம்! அன்பே சமதர்மம்! அன்பே அரசு! அன்பு!! அன்பு!!!" என்று மொழிவார். அந்த அன்புரை கூற தமிழகத்தில், யாருமில்லை, இனி. அவ்வளவு சீரிய உள்ளமும், எளிய வாழ்வும் பெற்றிருந்தார், அவர். தமிழ் அவரால், புது உருப் பெற்றது. 'திரு. வி. க. நடை', எனும் புது நடையைத் தந்த புனிதர். கடைசிக் காலத்தில், நாம் சென்ற போதெல்லாம், அவர் காட்டிய ஊக்கமும் ஆர்வமும், உள்ளத்தைக் கசக்கிப் பிழிகின்றது.

தமிழ்ப் பெரியார்!
தமிழர் தலைவர்!
தொழிலாளர் தந்தை!
அன்பின் உருவம்!
சாதுச் சின்னம்!!

தமிழகத்தை விட்டுப் போய்விட்டது—அவர் உடல் வெந்து நீராகிவிட்டது. நம்மோடு இருந்தவர்! நச்சரவங்களின் கொட்டத்தை, தமிழைக் காட்டி, மட்டந்தட்டிய தலைவர்! சாய்ந்துவிட்டார்—சாவுக் குகை, அவரையும் இழுத்துக் கொண்டுவிட்டது.

தமிழ் உள்ளளவும், தமிழர் உள்ளளவும் அவர் புகழ் வாழும்! அத்தகைய 'அன்னை' அவர் — தமிழருக்கும், தமிழ்த் தலைவர்களுக்கும். அவரை இழந்துவிட்டோம்! ஆற்றொணாத் துயரால் துடிக்கும் அவரது குடும்பத்தாருக்கும், தொழிலாளர் தலைவர்களுக்கும்—அவருடைய பிரிவால் பெருந்துயர் பெற்ற பெரியார் அவர்கட்கும் — தி. மு. க. தன்னுடைய, அன்பு கலந்த அனுதாபங்களைச் சமர்ப்பிக்கிறது.

வாழ்க, தமிழ்ப் பெரியார் புகழ்! வளர்க, அவர் விரும்பிய அன்பு மார்க்கம்!!

✻

[கடைசிக் காலத்தில் நம் இயக்கத்தின்மீது, தமிழ்ப் பெரியார், காட்டிய ஆர்வம், மிக மிக அதிகமாகும். 1948 அக். 23, 24 தேதிகளில், ஈரோட்டில் நம் பொதுச் செயலாளர் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில், 'திராவிட நாடு' படத்தைத் திறந்துவைத்து, அவர் ஆற்றிய, ஆணித்தரமான சொற்பொழிவின் சில பகுதிகள். அதனை மீண்டும் படிக்கும்போது, கண்கள் குளமாகின்றன! எத்தகைய அறிவுச் செல்வம் அவர்! இந்த மண், அவரது தலைமையைப் பெறாமல், அவரை இழந்துவிட்டதே!!]

"திராவிட நாட்டுப் படத்தை நான் திறந்துவைப்பது பொருந்துமா என்று பல தடவை யோசித்துப் பார்த்தேன். முடிவில், இந்நாட்டு மக்கள் எல்லோருமே திராவிடர்கள்தான். நானும் திராவிடன்தான். எனவே, தாராளமாகத் திறந்துவைக்கலாம், அதில் ஒன்றும் தவறில்லை என்கின்ற முடிவுக்கு வந்தேன்"

✻

"உண்மையோடும், உறுதியோடும், வீராவேசத்தோடும் கேட்போர் மனத்தில் பசுமரத்தாணி போல் பதியும்படி பேசக்கூடிய எண்ணற்ற இளைஞர்கள் இருக்கும்போது, திராவிடநாடு பிரிவினையடைவதில் சிறிதும் ஐயப்பாடு இருக்கக் காரணமில்லையென்று நான் துணிந்து சொல்லுவேன்"

✻

"திராவிடர்கள் என்பதற்கு

இந்த ஆராய்ச்சியில் பல பொருள்கள் தென்பட்டன. அவற்றுள் இரண்டைமட்டும் ஈண்டு எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். திராவிடர் என்றால், ஓடுபவர்கள் என்று ஒரு சாராரும், ஓட்டுபவர்கள் என்று மற்றோர் சார்பாரும் கூறுகின்றனர். வடமொழிச் சார்புடையார் முன்னைய அர்த்தத்தையும், சிவஞான முனிவர் அவர்கள் பின்னைய அர்த்தத்தையும் கூறுகிறார்கள். இவற்றுள் எதைக் கொள்வதென்பதை உங்கள் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்.

ஓட்டுகிறவர்கள் என்றால், மாசை—அசுத்தத்தை—ஓட்டுகிறவர்கள்—மனத்துக்கண் உள்ள மாசை ஓட்டுபவர்கள் என்றுதான் அர்த்தம் கொள்ளவேண்டும். 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்கிற அறத்தின் வழி நடந்தவர்களே திராவிடர்கள்"

*

"'திராவிடம்' என்கிற சொல் 'பிராமி' மொழியிலும் இருக்கிறது பிராமி மன்னன் நிக்கலஸ் ஆட்சிச் சரித்திரத்தில் திராவிடர்களைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. ஸ்மிருதியிலும், பஞ்சத் திராவிடம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. மலையாளம், தமிழகம், ஆந்திரம், கேரளம், அவற்றோடு மராத்தி தேசம் ஆகிய ஐந்து திராவிடங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. மலையாள தேசத்தில் பிறந்து வளர்ந்து வடமொழி கற்று சவுந்தர்ய லகரி என்ற சமஸ்கிருத நூல் எழுதிய சங்கராச்சாரியாரும் அப்புத்தகத்தில் திராவிடர்களைப்பற்றி குறிப்பிட்டுள்ளார். எல்லையப்பர் அவர்களின் மொழி பெயர்ப்பின் மூலம் நாம் இதை அறியலாம்.

சுமார் 55 ஆண்டுகளுக்குமுன் தமிழ் நாட்டில் வாழ்ந்திருந்த சபாபதி நாவலர் என்கின்ற தமிழ்வாணரால் எழுதப்பட்ட திராவிடப் பிரகாசிகை என்கின்ற வார்த்தைக்குப் பல ஆதாரங்கள் காட்டப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இன்று இந்நாட்டின் தேசியப் பாட்டாக வழங்கிவரும் ஜனகணமனவிலும் கவி ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் 'திராவிட உட்கல வங்கா' என்ற வரியில் திராவிட நாட்டைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதைக்காணலாம்.

திராவிடநாடு என்று ஒரு நாடு தொன்றுதொட்டு இருந்துவந்திருக்கிறதென்பதற்கு இவ்வாதாரங்களே போதும் என நினைக்கின்றேன். இத்திராவிட நாட்டிற்கு எல்லை குறிப்பதும் மிகச் சிரமமான காரியமல்ல. சரித்திரமே சுலபமாகநிர்மாணித்துவிடும் எந்தெந்த பகுதிகள் திராவிட நாட்டைச் சேர்ந்தவை என்று.

எனவே திராவிடம் என்று ஒரு பகுதி இருந்து வருகிறது என்பதைப்பற்றியோ அல்லது அதன்எல்லையைக் குறிப்பிடுவதுபற்றியோ யாரும் நம்மோடு சர்ச்சைக்கு வர முடியாது.

*

"இந்தியாவென்பது பெரிய நாடு. இதில் பல திறப்பட்ட மக்கள் வாழ்கிறார்கள் என்றாலும் இந்நாட்டில் இரண்டு பெரிய கலாச்சாரங்களே அடிப்படைக் கலாச்சாரங்களாகக் காணப்படுகின்றன. இவை இரண்டும் பெரிதும் முரண்பட்ட கலாச்சாரங்களாகவும் இருந்து வருகின்றன. இவற்றுள் ஒன்று ஆரியக் கலாச்சாரமாகும். மற்றொன்று திராவிடக் கலாச்சாரமாகும். வடநாட்டில் பெரும்பாலும் ஆரிய கலாசாரமும் தென்னாட்டில் பெரும்பாலும் திராவிட கலாச்சாரமும் நிலவி வருகிறது.

இவற்றுள் ஆரிய கலாச்சாரம் சுரண்டலையும் ஏமாற்றுதலையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதால், அதைப் பின்பற்றி வருபவர்கள், தமது சுரண்டலுக்காக பிற நாடுகளை ஆக்கிரமிக்கும் எண்ணங்கொண்டு முயற்சிசெய்து வருகிறார்கள்.

திராவிடக் கலாச்சாரம் சமதர்மத்தை, சோஷலிசத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருப்பதால் அதைப் பின்பற்றுபவர்கள் பிறர் சுரண்டலை ஒழித்து சுதந்திரமாக வாழ விழைகிறார்கள். எனவே தான் பிரிந்து வாழ நினைக்கிறார்கள், தென்னாட்டவர்கள்.

ஒருகாலத்தில் தமிழ்நாடு மிகமிக உயர்ந்திருந்தது. பிறகு ஆரியத்தின் சுரண்டலுக்கு ஆட்படவே இன்று மிக மிகத் தாழ்ந்துவிட்டது. சுரண்டலுக்கு உள்ளாக்கிய வடநாடு மிகமிக உயர்ந்து நிற்கின்றது இன்று.

அந்நியன் சுரண்டல் பெருகப் பெருக பிரிவினை உணர்ச்சியும் பெருகுவது நிச்சயம்.

இன்று சிலர் கேட்கிறார்கள், திராவிட நாடு பிரிந்தால் தனித்து வாழ முடியுமா என்று. நிச்சயமாகத் தனித்து வாழமுடியும். இன்றைய நிலையைக்காட்டிலும் பன்மடங்கு உயர்நிலையில் வாழமுடியும் என்று அதிதிடமாகச் சொல்வேன்."

*

"இந்நாட்டில் எதுதான் இல்லை' மலைகள் இல்லையா? இருபுறமும் கிழக்குத்தொடர்ச்சி மலையும், மேற்குத்தொடர்ச்சி மலையும் இருக்கின்றனவே. செழிப்பான நெல்விளையும் நிலப் பரப்பில்லையா? எரிமலைச் சாம்பல் நிரம்பிய இயற்கை வளம் பொருந்திய மண்ணல்லவோ இந்நாட்டு மண். அதில் எதுதான் விளையாது? ஆறுகள் இல்லையா, இந்நிலப்பரப்பை வளம் செய்ய? அதற்கும் குறைவில்லாத வகையில் கோதாவரியுண்டு, கிருஷ்ணா உண்டு காவிரி உண்டு, பாலாறு உண்டு, பெண்ணையாறு உண்டு. இன்னும் எத்தனை வேண்டும்? உலோகங்கள் இல்லையா? கோலார் தங்க வயல்கள் எந்நாட்டைச் சேர்ந்தவை? ஐதராபாத்திலுள்ள மணிமலைகள் எந்நாட்டைச் சேர்ந்தவை? அந்த மணி மலைகளை வெட்டி எடுப்போமானால், இந்த அகண்ட உலகத்தையே விலைக்கு வாங்கிவிடலாமே. இந்நாட்டில் என்ன? இரும்புக்குத்தான் குறைவா? கவலையோடு பூமியைத் தோண்டிப் பார்த்து ஆராய்ச்சி நடத்திவந்தால் இந்நாட்டில் எதுதான் கிடைக்காது என்று நினைக்கிறீர்கள்? எல்லாம் கிடைக்கும்."

*

"எத்தனையோவழிகளில் இந்நாட்டில் தலை விரித்தாடிக்கொண்டிருக்கும் தரித்திரத்தை எங்களால் போக்கிக்கொள்ளமுடியுமே. தனித்தியங்கும் நாடுகளைப் பிரித்துத்தனியாக இயங்கும்படிச் செய்து ஏதோ சொற்ப அதிகாரங்களை மட்டும் மேலெழுந்த வாரியாக, மத்தியசர்க்காருக்கு வைத்துக்கொள்வதை விட்டு இமயம் முதல் குமரிவரை ஒரே ஆட்சியின்கீழ் கொண்டு வர

வேண்டுமென்று பாடுபட்டு வருகிறார்களே அது சாத்தியமா? வங்காளத்தை ஒன்றாக்க முடிகிறதா? ஐக்கிய மாகாண மக்களுக்கு. சமாதானம் சொல்லமுடிகிறதா? எங்கே இருக்கிறது ஒற்றுமையும் ஒருமைப்பாடும். காங்கிரஸ்காரர்களிடையே யாவது காணப்படுகிறதா ஒருமைப்பாடு? இவர்கள் ஆளும் இந்தியாவில் ஒருமைப்பாடு இருக்க?"

*

"நாங்கள் பன்னெடுங்காலமாகப் பாடுபட்டு வளர்த்த காங்கிரஸ் இன்று சாகும் நிலைக்கு வந்துவிட்டதே எங்கள் கண்முன்னாலேயே. எத்தனை பெரியவர்கள் காங்கிரசின் வளர்ச்சிக்குக் காரணமாயிருந்தார்கள். பெசண்ட் என்ன, சுரேந்திரநாத் பேனர்ஜி என்ன, தாதாபாய் நௌரோஜி என்ன, ஒரு திலகர் என்ன, ஒரு கோகலே என்ன, ஒரு காந்தியார்தான் என்ன. இவர்கள் வளர்த்த காங்கிரசா இன்று நம்கண் முன் காணப்படுகிறது. இல்லை, இல்லை. பின் யாருடைய காங்கிரஸ் காணப்படுகிறது என்று கேட்கிறீர்களா? சர்தார் வல்லபாய் படேலின் காங்கிரஸ் பாஸீசக் காங்கிரஸ் இதுதான் இன்று என் கண்ணுக்குத் தெரிகிறது."

*

"தோழர்களே! ஆகஸ்ட் வரைதான் எனக்கு காங்கிரசின் மீது பற்றுதல் இருந்தது. ஆகஸ்டு 15-ம் தேதி அதிகாரம் மாறிய அன்றே என் மனமும் மாறிவிட்டது. சுதந்திரம் வந்துவிட்டதாகக் கருதப்பட்ட அன்றைய தினமே காங்கிரஸ் கலைக்கப்பட்டிருக்க வேண்டும். கலைக்கப்பட்டிருந்தால் எவ்வளவோ நன்றாய் இருந்திருக்கும். காங்கிரஸ் இவ்வளவு கீழ் நிலைக்கு வருவதைக் காண வேண்டியிருக்காது.

40 ஆண்டு காலத்திற்கு மேலாக நாங்கள் உழைத்து உழைத்து வளர்த்து வந்த காங்கிரஸ் தொழிலாளர்களுக்குள்ள எல்லா குறைகளையும் போக்கும் என்ற நம்பிக்கையில் தொழிலாளர்களால் வளர்க்கப்பட்டு வந்த காங்கிரஸ், முடிவில் தொழிலாளர்களின் வயிற்றிலேயே அடிக்க ஆரம்பித்து விட்டதென்றால் அத்தொழிலாளர்களை காங்கிரஸைப் பின்பற்றி நடக்கும்படி செய்த எங்கள் மனம் பொறுக்குமா?"

*

"திராவிடர் கழகம் தன் அறப்புரட்சியின் மூலம் வெற்றி பெறும்போதுதான் தொழிலாளர் வாழ்வும் மலரும்.

புரட்சியில் இருவகையுண்டு. ஒன்று அறப்புரட்சி. அதாவது அகிம்சை புரட்சி. மற்றொன்று மறப்புரட்சி. அதாவது ஹிம்சை புரட்சி. நமது அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்ட பிரெஞ்சுப் புரட்சியும், ரஷியப் புரட்சியும் மறப்புரட்சிகள், நம் காந்தியார் நடத்திய புரட்சியோ அகிம்சைப் புரட்சி. ஆனால் அதன் மூலம் பெற்ற சுயராஜ்யமோ ஹிம்சைமயமாக மாறிவிட்டது. சுயராஜ்யம் வந்த பிறகு சுயராஜ்ய சர்க்கார் அகிம்சாவாதிகளின் மீதே குண்டுகளை வீசி வருகிறார்கள். சாத்வீக மறியல் செய்த தொழிலாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள். தொழிலாளர்களின் வீடுகளில் புகுந்து குண்டாந்தடிகளால் அடித்து தொழிலாளர்களை பயமுறுத்தி இருக்கிறார்கள். ஆனால் லெனின் மறப்புரட்சியின் மூலமே வெற்றி பெற்றார் என்றாலும் வெற்றிக்குப் பிறகு அவர் எவ்வளவோ சாத்வீகமானவர் ஆகிவிட்டார்."

*

"எவ்வளவு எடுத்துக்கூறினாலும் ஆரியரும் திராவிடரும் ஒன்றென்று பிதற்றிக்கொண்டு வருகிறார்களே! ஆராய்ச்சி நூல் எதையேனும் படித்துப் பார்த்ததுண்டா, நீங்கள்? ஆரியக்கலை வேறு திராவிடக்கலை வேறு ஆரியப் பண்பு வேறு; திராவிடப் பண்பு வேறு என்பதை ஜெர்மன் ஆராய்ச்சியாளர்கள்கூட ஒப்புக் கொண்டிருக்கிறார்களே!

திருக்குறள் ஒன்றே போதுமே ஆரியத்தையும் திராவிடத்தையும் பிரித்துக்காட்ட. திருக்குறளில் அறம் பொருள், இன்பம், இம்மூன்றைப்பற்றித்தானே எழுதி இருக்கிறது. வீட்டைப் பற்றி, மோக்ஷத்தைப் பற்றிக் குறிப்புக் கூட காட்டவில்லையே, திருவள்ளுவர்! திருவள்ளுவர் ஒன்றும் நாஸ்திகர் அல்லவே! இருந்தும் ஏன் மோட்சத்தைப்பற்றிப் பேச மறுத்தார்? திருக்குறள் திராவிடப் பண்பான மோட்சத்திற்கு அதில் இடம் இருக்கக்கூடாது என்பதால்தானே

வீட்டுக்கு எல்லைக் கட்டியவனாயிற்றே தமிழன்! அறம், பொருள், இன்பம் இவற்றினோடு தன் வாழ்க்கைக்கு எல்லையை நிர்மாணித்துக் கொண்டவனாயிற்றே தமிழன்! தொல்காப்பியர் முதல் திருவள்ளுவர் ஈறாக எந்தத் தமிழனும் இவற்றைத் தாண்டி எதும் இருப்பதாகச் சொல்லவில்லையே! "கேபிடல்" என்கிற உலகம் போற்றும் பொருளாதார தத்துவ நூலை எழுதிய கார்ல் மார்க்ஸ் என்பவரும் இதைத் தானே கூறியுள்ளார்! திருவள்ளுவர் கூறிய அறம், பொருள், இன்பம் இவற்றுடன் நின்ற தமிழர்கள் தம் நாட்டை இழந்தாரில்லை. நாகரீகத்தில், அறிவு வளர்ச்சியில், எதிலும் குறைந்தாரில்லை."

*

"இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பொருளீட்டி அறம்செய்த இன்பம் துய்த்து வாழ்ந்த தமிழன் இன்று பொருளாதாரத்தில் அன்னியனுக்கு அடிமைப்பட்டு அறம் செய்ய வக்கின்றி இன்பம் எப்படி இருக்கும் என்று தெரியாது இன்னல் வாழ்க்கை வாழ்கிறதே! இதை கண்டு திராவிடன் ஒவ்வொருவனும் இரத்தக் கண்ணீர் விடவேண்டாமா?

ஆரிய மாயையை அகற்றி திராவிடத்தில் மறுபடியும் புத்துணர்ச்சியை உண்டாக்கப் பாடுபட்டுவரும் திராவிடக் கழகத்திற்கு நீங்கள் யாவரும், தன்மானத் தமிழ் மகன் ஒவ்வொருவனும் உரிமை வேட்கை கொண்ட ஒவ்வொரு தொழிலாளர் தோழனும், உதவிபுரிதல் வேண்டாமா?"

*

அன்று சொன்னேன் நிலக்கோட்டையில் எனது கடைசி மூச்சுக்கூட திராவிடம் வாழ்க திராவிடர் கழகம் வாழ்க என்பதாக இருக்கும் என்று. இன்று துணிவுடன் கூறுகிறேன் இன்னும் 10 ஆண்டுகளில் திராவிடநாடு பிரிந்து தனி அரசாகத் திகழுமென்று.

நீங்கள் மட்டும் உங்கள் முயற்சியைக் கைவிடாது இருந்துவருவீர்களானால் நண்டிப்பாகக் காணலாம் 10 ஆண்டில் திராவிடத் தனி அரசை.

'நாம் செல்லும் பாதை'

[தில்லை மறைமுதல்வன்]

நான்கு ஆண்டுகளை முடித்து
'டோம்! நமது இலட்சியப்
தையிலே உள்ள நான்கு மைற்
களைத் தாண்டிவிட்டோம். நமது
லாற்று ஏட்டில் நான்கு அத்தி
யங்கள் திருப்பப் பட்டுவிட்டன.

வேதனைத் தீயினிடையே வெற்
சிரிப்போடு வளர்ந்து வரும்
து விடுதலை வேட்கையை—சுதந்
தாகத்தை—இன்று எண்ணும்
ாது நமது இதயம் பூரிப்பால்
பி விரிகிறது!

முன்னேற்ற வாழ்வின் விடி
ள்ளி, இருள்கிழித்த முழுமதி,
மை போக்கும் செஞ்சோதி—
ற பாராட்டுப் பத்திரத்தை மக்
மன்றம் இன்று நம்மிடம் நீட்டு
து! "விடுதலை விரும்பிகளே!
ன்போகாது உங்கள் இலட்சி
" என்று நம்பிக்கைக் குரல்
டுத்து, வாழ்த்துகிறது, வள
திராவிடத்தின் வீரர் கூட்டம்!
த்தகைய நல்மதிப்பு நமக்குக்
டத்திருப்பது—நமது இலட்சிய
பயணத்தின் கரையாத வெற்றி!
இந்த வெற்றி முத்திரையைப்
ற நாம் பட்ட கஷ்டங்கள்......!
ண்டிக்கடக்க வேண்டியிருந்த
கரமேடு பள்ளங்கள்—சகித்து
க்க வேண்டியிருந்த சங்கடக்
யல்கள்-இன்னல்களை இன்முகத்
டு வரவேற்று, உலவ வேண்டி
ந்த சம்பவங்கள்—அடக்குமுறை
புகளைப் பொறுமையோடு ஏற்
புன்சிரிப்புகளை புல்லர்கட்குப்
ாகத்தர வேண்டியிருந்த நேரங்
—ஏராளம்! எனினும்... வளைந்து
வில்லை—வைரநெஞ்சு கொண்ட
ளாக வளர்ந்திருக்கிறோம்!

க்கள் மன்றம் மகிழ்ச்சி பொங்
இதயத்தோடு நமக்கு வாரித்
அன்பும், கொள்கை உரம்
று உலவும் கழகக் காளைகளின்
ப்பாடு நிறைந்த கடமை
ர்ச்சியும், நமது ஊக்கத்தை
ன்னிற்கு உயர்த்திவிட்டன!
ளிப்போடும் குதூகலத்தோடும்,
இதுவரை நடந்து வந்த
தையை நோக்கி, நமது பார்
யை விரிக்கிறோம் — இன்று,

வியப்பும், மகிழ்ச்சியும் உண்டு பண்ணும் நமது நான்காண்டுப் பயணத்தின் பெருமையைப் பேசும் அந்தக் கடந்த கால வரலாறு......!

திராவிடரியக்க வரலாற்றிலே படர்ந்த 'இருளை' விலக்கிக்கொண்டு —காரிருட்போர்வையைக் கிழித்துக் கொண்டு கிளம்பும் விடிவெள்ளியாக — திராவிட முன்னேற்றக் கழகம் கிளம்பியது! திராவிடர் கம் நீடுதுயில் நீக்க பாடிவந்த நிலாவாக —திராவிட சமுதாயத்தின் இன எழுச்சிக்கான வற்றாத புதுப் புனல் கருத்தோடையாக—பகுத்தறிவாளரின் படைவீடாக—சமுதாயப் புரட்சியின் தலைமை நிலையமாக — இன்பத் திராவிடத்தை எழில்மிக்க சித்திரமாகத் தீட்டும் ஓவிய வீரர்களின் கோட்டமாக—உதயமாயிற்று திராவிட முன்னேற்றக் கழகம்! வீரகீதம் முழங்கிய வண்ணம், புதுப்பாசறையில் நுழைந்தோம்.

அப்போது நம்மீது தான் எவ்வளவு பரிகாசப்பாணங்கள்—தூற்றல் கணைகள்—அவதூறு அம்புகள்—வீசப்பட்டன! 'அரசியல் அனாதைகள்' என்று கேலி பேசினர் குறும்புத்தனமாக! 'அற்பாயுசுகள்' என்று ஜாதகம் கணித்தனர்—நம் அழிவில் ஆனந்தங்காண இருந்த சில அறிவுப் பஞ்சங்கள்! 'இவர்களால் முடியுமா ஒரு இயக்கம் நடத்த' என்று சந்தேகப் பார்வையை வீசிப்பெரிந்தனர் சிலர்! 'இவாளொட தலைவரே இதுகளை நம்பலே! எப்படி......' என்று சில வஞ்சக நரிகள் விஷப் புன்னகை புரிந்தன.

ஆனால் நாம் இதற்காகக் கவலைப் பட்டுச்சோர்ந்துவிடவில்லை. 'என்ன செய்வோம்' என்று பெருமூச்சு விட்டு சுருண்டுவிடவில்லை. கண்ணீரைத் துடைத்து விட்டுக் காரிய மாற்ற முனைந்தோம். ஈட்டி எறிந்தவர்களுக்கு அலட்சியத்தைப் பதிலாகத் தந்துவிட்டு, ஆர்வத்தை தோழமையாக்கிக் கொண்டு, 'கண்ணிய' விளக்குக் காட்டும் ஒளியில் இலட்சிய புரி நோக்கி நமது 'புனித யாத்திரை'யைத் துவக்கினோம்!

நமது இலட்சியப்புரிப் பயணத்தைத் துவங்கியபோது நம்மிடமிருந்த செல்வமெல்லாம் 'நாம்' தான்! நாம்ஏழைகள்-ஏழைகளுலகு நம்முடையது! பணபலம்—நம்மிடம் கிடையாது! பத்திரிகை உலகம் — அவ்வளவாக இல்லை! பாராட்டு — நிச்சயமாகக் கிடையாது! எதிர்ப்பு அமோகமாக உண்டு! உழைப்பும் ஊக்கமுமே நமது சொத்துக்கள்— அதைத் துணைவைத்துக்கொண்டே நடந்தோம்!

நமது பயணத்தின் இடையிடையே கெடுமதியாளர் சிருஷ்டித்த கொடுமைகள் நம் பாதையை பயங்கரமாக்கின, இருள் மூடிய பாதையில் எதிர்ப்பட்ட பல இடர்களைச் சமாளித்துக்கொண்டு நாம் செல்லும்போது சில கொள்கையற்ற கோட்டான்கள் கூவின! பார்ப்பனீயப் பாம்புகள் நஞ்சைக் கக்கி நர்த்தனமாடின! ஆட்சிஎனும் கொடுவாய்ப் புலிகள் சீறின! எனினும் நாம் வளர்ந்தோம் — மேலே நடந்தோம்!

நிற்காது, நிலைக்காது என்று 'ஆசி' கூறியவர்களின் கண்கள் அகலமாகி, இதயம் சுருங்குமளவுக்கு வேகமாக வளர்ந்தோம். இரத்தவெறி கொண்ட ஆட்சிபுரியும் ஓநாய்கள் நம்மீது பாய்ந்து கவ்வின. நம்மவரின் இரத்தம் மழையென வழிந்தோடியது! மண்டை பிளந்து சிதறின! எலும்புகள் முறிந்துவீழ்ந்தன! எனினும் வளர்ந்தோம்.

கொடுமையே உருவானவரின் கூடாரத்திலிருந்து அடித்த விஷக் காற்றினால்நமதுவேகத்தைத்தடைப் படுத்த முடியவில்லை. கொள்கைக்காக நாம் கொடுத்த விலை கொஞ்சமல்லவே! எதிரிகள் இட்ட தீயில் நம்மிருவர் எரிந்து கருகினர். 'மஜீத்' தேசியத்தாரின் வெறிச் செயலுக்குப் பலியானான்! 'பாண்டியன்' பாரதமாதாவின் புதல்வர்களால் கடித்துவிழுங்கப்பட்டான். இரு கொள்கைத்தளிர்கள் அகிம்சா மூர்த்திகள் மூட்டிய தீயில் வெந்து போயின! அவர்களைப் பிண ஊர்வல

மாகக்கொண்டு சென்று நமது கரங்களாலேயே கல்லறை கட்டிமுடித்தோம்! நடுங்கும் கரத்தால் வழியும் கண்ணீரைத் துடைத்தபடி மேலே நடந்தோம்—வளர்ந்தோம்!

வளர்ந்தோமென்றால், வகையற்ற முறையிலா? அமைப்புத் தெரியாத அரிச்சுவடிகளாகவா? அல்ல! அல்ல! திட்டவட்டமாக, திராவிடத்தின் நாலா பகுதிகளிலும் திறன் மிக்கவர்களை செயலாற்றுகிறவர்களாகக் கொண்டு வளர்ந்திருக்கிறோம்.

நாடெங்கும் லட்சக்கணக்கான கூட்டங்கள்மூலம் நமது 'நாட்டின் நலிவு போக்கும்' பிரச்சாரங்களைப் பரப்பினோம். தமிழகமெங்கும் ஒரே தணல்வீச்சு—புயல்வேகப் பேச்சு! மாவட்டந்தோறும் நடத்தப்பட்ட பலப்பல மாநாடுகள் — சமூக நீதி, பேச்சுரிமை, எழுத்துரிமைபோன்ற மாநாடுகள்-நிதி நாடகங்கள்—இவற்றால் நமது பொன்னான கொள்கைகளை மக்கள் மன்றத்தில் விரித்து வைத்தோம் — வாரியுண்டனர் மக்கள்! சாக்கடையாக இருந்த கலை அரங்கத்தை நமது அறிவுப் பணியால் திருத்தி நாற்றம் போக்கும் பகுத்தறிவுத் தென்றலை வீசச் செய்தோம்!

நாம் கிளப்பிய வினாக்கள், பொங்கும் கடலலைகள்போல, மக்கள் இதயங்களில் சுழன்றன. நன்மை தீமைகளை அறியாது, ஆமைகளாக, வெறும் ஊமைகளாகக் கிடந்தோர் ஆர்ப்பரித்தெழுந்தனர்! ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டோனின் புலி வேடம் பிய்த்தெறியப்பட்டது! சாதி வெறி-சாத்திரச் சம்பிரதாயங்கள்-சமயப் பூசல் - வேண்டாத பிற்போக்கு வேலிகள்—அனைத்தும் சுடுகாடு நோக்கி 'ஊர்வலம்' சென்றன!

வாய் வீரர்களாகாமல் காரிய வீரர்களானோம். வந்துபோன வடநாட்டு மந்திரிகளுக்கெல்லாம் கடலலையெனக் குமுறி எழுந்து அதருப்தியை அறிவிக்க கருப்புக்கொடி காட்டினோம். அதற்குப் பரிசாகத் தரப்பட்ட அடக்குமுறையைப் புன்சிரிப்போடு ஏற்று 'தியாகத் தழும்பு' பெற்றோம். துப்பாக்கி முனைகளுக்கு நமது இரத்தத்தால் சிகப்பு வர்ணம் பூசினோம்!

பிறகு, நமக்கென்று கழகச் சட்டதிட்டம் உருவாயிற்று. வரலாறு, வியப்பால் வாய் பிளக்கும் முறையில் மாநில மாநாடு வெற்றிச் சிந்து பாடியது. தேர்தல் மழை பெய்த போது நமது வளர்ச்சியின் வேகத்தைக் கண்ட சிலர், நமது திரண்ட சக்தியை விலைக்கு வாங்க முடியுமா என்று பெருமூச்சுவிட்டனர். நமது 'இலட்சியக்குரலை' ஏற்றுக்கொண்டவர்களை நமது ஆதரவால் வெற்றி வீரர்களாக்கினோம். பிறகு நாடெங்கும் சட்ட திட்டப்படி-ஜனநாயக ரீதியில்-கழகத் தேர்தல் நடத்தி புதுக் கழகங்களை நிறுவினோம். திராவிடத்தின் எல்லைக்கு அப்பாலுள்ள இலங்கையிலும், பர்மாவிலும், பம்பாயிலும் கழகங்கள் அரும்புவிட்டன! இலட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் நமது பாசறையில் அணிவகுத்து நின்றனர்!

தமிழர்களெல்லாம் இளிச்சவாயர்கள் என்று பரிகசிப்பதுபோல இரயில்வே நிலையங்களில் இருந்த இந்திப் பெயர்களைப் பார்த்தோம். மொழியாதிக்கம் நம்மீது சுமத்தப்படுவது கண்டு குமுறினோம்-வீறிட்டெழுந்தோம்-இந்தி அழிந்தது! ஆதிக்கக்காரர் முகத்தில் கரி பூசப்பட்டது! ஆனால், அந்தச் சொரணையற்ற சோற்றுத் துருத்திகள் 'பூசியது கரியல்ல-சந்தனம்' என்றனர். தமிழகம் அவர்களைப் பார்த்துச் சிரித்தது!

நேர்மையற்ற ஆட்சியாளரால் நெசவாளர்கள் நலிவுற்றனர்—நாதியற்று அலைந்தனர்—நாடோடிகளாயினர். கண்ணீர் சிந்திக் கதறினோம்—சகோதரர்கள் துயர் கண்டு! துன்பம் துடைக்கவேண்டிய துரைத்தனமோ சொகுசுடன் உலவியது! நாம்தான் நெசவாளரின் வேதனையை நாடெங்கும் பேசினோம். வீதிகளிலே கைத்தறித் துணிகளை ஏந்திச் சென்று, வியாபாரக் குரலெழுப்பி, விற்றோம். மக்களிடையே நமது பிரசாரத்தால் நெசவாளர் துயர் துடைக்கவேண்டும் என்ற எண்ணத்தை எழுப்பித் தேங்கிக் கிடந்த துணிகளை விற்கச் செய்தோம். நம்மால் முடிந்த பணியினைச் செய்தோம். நேர்மையற்ற அரசாங்கம் நன்றி கூறாவிட்டாலும், மக்களும் நெசவாளரும் வாழ்த்தினர்!

தமிழகத்தில் புயல் வீசியது. இயற்கையின் இந்தக்கோரவிளையாட்டால் சுருண்டு வீழ்ந்தவர் தொகை கண்டு கலங்கினோம். சரிந்துவீழ்ந்த அவர்களுக்கு உதவியளிக்க, நாடெங்கும் நாடகங்கள் நடத்தி, நமது சக்திக்கும் மீறிய வகையில் முப்பதாயிரம் ரூபாய்களை அவர்களுக்கு அன்புக் காணிக்கையாக்கினோம் — நல்லவர் வாழ்த்தினர்! நாடு மகிழ்ந்தது.

நாம் புது முகாமில் நுழைந்த போது காலணா நமக்கு நிதி கிடையாது. நமது உழைப்புத் தந்த ஊதியத்தால்—வியர்வை தந்த விருந்தால்—நமக்கென்று ஒரு தலைமை நிலையம்—முப்பதினாயிரம் ரூபாய் மதிப்பில்—அமைத்துக்கொண்டோம்.

நமக்கென்று 'தினத்தாள்' துவக்க முடியாது தவித்தோம். வசதிகளில்லாததால் வாளாகிடந்தோம். கடைசியில் நமது முயற்சி தந்த பயனாய் ஏதோ ஒரு அளவுக்குத் "தினத்தாளை" துவக்கிவிட்டோம்.

இந்த அளவுக்கு வளர்ந்தோம் நாம். மிக மிகக் குறுகிய காலத்தில் மிக மிகப் பெரிய காரியங்களைச் செய்து வாகை சூடினோம். தென்னாட்டின் எந்த அரசியல் கட்சியும் பெறாத செல்வாக்கை அடைந்தோம்—நமது நீதியான—நேர்மையான செய்கைகளால்!

நாட்டுக்கு நல்லது பயக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட நாம் தயங்கவில்லை. அதேபோது நாட்டு மக்களுரிமையைப் பறிக்கும் ஆள்வோர் போக்கையும் அனுமதிக்கவில்லை.

கடைசியில், நமது நான்காண்டு பயணத்தின் இறுதிக் கட்டத்தில் திராவிடம் கண்டிராத—மறக்கமுடியாத — போராட்டங்களை நடத்திவிட்டோம். திராவிட விடுதலைப் போராட்டத்தின் துவக்க விழாவை நடத்திவிட்டோம்! 'இரத்தக் காணிக்கை' தந்துவிட்டோம்.

நடமாடும் எரிமலையாக—நகர்ந்து செல்லும் மயானமாக—நஞ்சு ஊறும் பொய்கையாக — உலவும் ஆச்சாரியார், திராவிட சமுதாயத்தை என்றும் எழுந்திருக்க முடியாமல் அடிமைச் சேற்றில் அழுத்திவைக்க வர்ணாச்சிரம தர்மத்தை நிலைநாட்ட, தமது இனத்தவரின் வாழ்வு சோபிதத்தை என்றும் சொந்தமாக்கச் செய்ய, 'புதிய கல்வி திட்ட

ற பெயரால் ஒரு வஞ்சக வலை
யப் பின்னினர். சாதிமத பேத
ற்ற, மனிதனை மனிதன் மதிக்கும்
முதாயத்தை உருவாக்கத் துடிக்
ம் நாம் இந்த 'பயங்கர சூழ்ச்சி'யைக்
ண்டு பதறினோம்—வேண்டுகோள்
டுத்தோம் — மக்கள் எதிர்ப்பை
ட்டிக் காட்டினோம் — அசைய
ல்லை ஆச்சாரியார்! அவர் இதயம்
ரும்பாகத்தானிருந்தது. கடைசி
ல் போர்! போர்! என்றோம்.
மைதியான முறையில் மறியல்
ய்தோம். ஆச்சாரியார் இரத்த
றியன் இட்லராக அவதார
டுத்தார். துப்பாக்கி பேசியது—
ண்ணீர்ப் புகை சூழ்ந்தது — தடி
விளையாடியது-நம்மவரின் இரத்
சிந்தியது! சிறையின் வாய்கள்
து தோழர்களை அடக்கிக்
ண்டன! அஞ்சவில்லை, அயர
லை நாம்!

அடுத்த போராட்டம் வடநாட்டு
க்கத்தின்மீது குறி வைத்தது.
ளித் தமிழ் பூமியிலே, சிலம்பு
திருநாட்டிலே, இன்பத் தமிழ்
ம் கமழும் மண்ணிலே, வட
டு ஆதிக்க முதலையின் பெய
ப் பார்த்தோம். பணத் திமிங்
மான டால்மியாவின் பெயரால்
ல்மியாபுரம்' இருப்பதைக் கண்
ம். தமிழ்த்தாயின் நெற்றியில்
மானச் சூடு போட்டிருப்பதைக்
டு பதறினோம். திராவிடத்தின்
லவத்தைச் சூதால் சுரண்டிச்
லும் கொள்ளைக்காரன் ஒருவ
பெயரா, நமது தாயகத்தில்
க்கவேண்டும் என்று கேட்
ம். 'கூடாது! கூடாது!' என்ற
மக்கள். உடனே கூறினோம்
வு தரும் டால்மியாபுரத்தை
தெறிவோம்' என்று!

வண்டினோம், அரசியலாரை.
ாக்காதராகிவிட்டனர், அந்தக்
மதியாளர்கள். எனவேதான்
ர்! போர்' என்று முழக்கமிட்
ம். கல்லக்குடி என்னும் அழகு
ப் பெயரை நிலைநாட்டுவோம்
வீரக் குரலெழுப்பினோம்.
போர் துவக்கினோம்—அமைதி
ஒட்டுப் போராட்டம் நடத்தி
ம். ஆனால்......! துப்பாக்கி
ரத்தனம் நடத்திவிட்டது.
டுகள் ஆறு உயிர்களை குடித்து
ன. ஆறு தோழர்கள் அடக்கு
ற ஓனாயால் பிய்த்தெறியப்

பட்டுவிட்டனர். டால்மியாபுரத்திலும் தூத்துக்குடியிலும் இரத்தம் அள்ளித் தெளிக்கப்பட்டுவிட்டது. அடித்து நொருக்கப்பட்டனர், அன்புச் சகோதரர்கள். சிறையில் தள்ளிப் பூட்டப்பட்டனர்! எனினும், அஞ்சவில்லை, அயரவில்லை நாம்!

அடுத்த போராட்டம், தமிழ்த் தாயின்மீது ஆணவத்துடன் வீசியெறியப்பட்ட ஒரு சுடு சொல்லை எதிர்த்து களம் அமைத்தது. அகில உலக ஜோதி, அலகாபாத் பண்டிதர் நேரு, ஆட்சி தந்த போதையால், ஆணவத்தால், தமிழரைப் பார்த்து, தமிழர்தம் உரிமைப் போராட்டத்தைப் பார்த்துக் கூறினர், 'நான்சென்ஸ்' என்று! அதன் விளைவு......? தென்னாட்டு மக்கள், திராவிடத் தீரர்கள் தோள் தட்டினர். "நேர்மையற்ற நேருவே! சேரனின் சந்ததியாம் எங்களைப் பார்த்துக் கூறினீர் 'நான்சென்ஸ்' என்று. அல்ல! அல்ல! எங்களைப் பார்த்துக் கூறவில்லை! தமிழினத்தைப் பார்த்துக் கூறினீர்! தமிழ்நாட்டைப் பார்த்துக் கூறினீர்! எங்கள் தாய் பூமியைப் பழித்த உமது ஆணவத்துக்குப் புத்தி புகட்டியே தீருவோம்" என்று கொந்தளித்து எழுந்தனர். தமிழகத்தில் ஓடிய ரயில்கள் அத்தனையும் ஜூலை 15 அன்று நின்றன! நேருவின் ஆணவத்துக்கு ஒரு சாட்டையடி தரப்பட்டது!

ஆனால், இதற்காக நாம் தந்த விலை......! ஆயிரமாயிரம் தோழர்களைச் சிறைக் கதவுகளுக்குள்ளே வழியனுப்பினோம். அறுவருடைய எலும்புகளை குவித்துத் தந்தோம்! 'இரத்த விருந்து' தந்தோம், ஆட்சியாளரின் அடக்குமுறைப் பசிக்கு! எனினும், அயரவில்லை, நாம்!

ஆட்சியாளர் வெட்டிய குருதிக் குளம்...... அதில் எத்தனை பிணங்கள்! ஐயோ! எத்துணைப் பயங்கரம்! 5000 மேற்பட்ட தோழர்கள்—கொள்கைக் குன்றுகள்—சிறையிலே இருப்புக் கதவுகளுக்கு அப்பால்! கரமிழந்தோர், காலிழந்தோர் ஏராளம்! அவதிக்காளானோர்—அளவிட முடியாது!

நாம் சிங்காரச் சிந்து பாடும் நாள், அது கண்டு களிக்கும் சிங்கங்கள் சிறுகூண்டில் உலவுகின்றன, தாங்கமுடியாத பிரிவு! இதயம் வெடிக்கக்கூடிய வேதனை! எண்ணங்கள் புயல்வேகம் கொள்ளும் சம்பவம்! கண்களிலிருந்து அனலும் புகையும் சேர்ந்து கிளம்பும் நிகழ்ச்சி! எனினும் சகித்துக்கொள்வோம்!

17—9—49 அன்று பிறந்தோம்!
17—9—53 வுடன் நான்கு ஆண்டுகள் முடிகின்றன!

ஐந்தாம் ஆண்டு துவக்க நாள் தியாகத் தழும்புகளோடு ஆரம்பமாகிறது. வசதியையும் வாய்ப்பையும் நாமே தேடிக்கொண்டு, கண்ணீரில் பிறந்த கழகத்தை நாட்டிற்கான நற்சோலையாக்கித் தந்துவிட்டோம்.

தனியாட்சி! — இது நமது மாபெரும் கோரிக்கை 'திராவிட நாடு' கேட்கிறோம்—அதுவே நமது உயிர்மூச்சு! 'நம்மைநாமே' தனித்துக்காத்துக்கொள்ளவிரும்புகிறோம் —அதுதான் நமது ஜீவ லட்சியம்! இது எவ்வளவு பெரிய பிரச்னை! நாம் கேட்பது தனிநாடு — அங்கே நாம் அமைக்க விரும்பும் சமுதாயம் புதியது — பொதுவுடைமைச் சமுதாயம்!

இலேசான காரியமா இது! எளிதில் முடிந்துவிடக்கூடியதா! முடிந்ததும் நமது பணி ஓய்ந்துவிடத்தான் இயலுமா! எவ்வளவு பெரிய இலட்சியம் நம்முடையது! இதைச் சாதிக்க எத்தனை தியாகக் கட்டங்களைத் தாண்டியாக வேண்டும்! தென்றலும் தெவிட்டாத தேனும் சொரியும் சோலைகளா நமதுபாதையில் இருக்கின்றன? அல்லவே! தணல் பொழியும் பாலைவனங்கள்—கொதிக்கும் அனல் குகைகள்—நச்சு மீன்கள்நெளியும் விஷத்தடாகங்கள் —இவைகள் அல்லவா நமது தடைக்கற்களாக இருக்கின்றன! இவற்றைத் தாண்டியல்லவா இலட்சியபுரி அடையவேண்டும் — இன்பத் திராவிடம் காணவேண்டும்!

நாம் சிந்தனையில் பலப்பல ஆசைக் கனவுகளை அடைத்துவைத்திருக்கிறோம். நமது இதயச் செடியில் பல எண்ண மொக்குகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறோம். அந்த 'இலட்சியக் கனவு'களை நிறைவேற்றிப் புதியதோர் உலகு செய்ய விரும்புகிறோம். புது நாடு! புது நிலை!! — இதை நிர்மாணிக்க வேண்டும், 'நாம்' நிர்மாணிக்க

வேண்டும்! நம்மை மட்டுமே நம்பியிருக்கும் 'நாம்' நிர்மாணிக்கவேண்டும்.

எண்ணிப் பாருங்கள் இது எத்துணை பெரிய இலட்சியம் என்பதை. நாம் செய்ய வேண்டிய பணியினை நினைத்தால் நமக்கு மலையும் மாக்கடலும், அங்கே அடிக்கும் கோர அலைகளும் தென்படும். நம்முன் நிற்கும் கடமைகளை எண்ணினால் விரிந்து கிடக்கும் வானமும், அங்கே முழங்கும் இடிகளும் காட்சி தரும்! நமது இலட்சிய புரி பயணத்தின் நடுவே எத்துணை எத்துணையோ 'சோதனை'கள்! நம்மை அழித்துவிட வாய் பிளந்து கொண்டிருக்கும் ஆபத்துக்கள் பலப்பல, எத்தனையோ நெருப்புக் கால்வாய்களைத் தாண்டியாக வேண்டும். தூக்குமேடைகள் பல நம்மை எதிர்நோக்கியிருக்கின்றன! துப்பாக்கி முனைகளால் நம்மவர் பலருடைய இதயங்கள் தே...
யெறியப்படலாம்! நம்மவர் பல...
'களபலி'யாகி 'கல்லறை'யாக மா...
வேண்டியிருக்கும்.

அதோ! நம் கண்களுக்கு...
தெளிவாகத் தெரிகிறது இலட்சிய
புரி, நாம் நடப்போம் அதை
நோக்கி! நமது பயணம் வீண்
போகாது — நிச்சயம் வெற்...
பெற்றே தீருப்!

✻

'கண்ணாடி வீடு'ம்! ★ ★ 'அறுகம் புல்'லும்!!

ஒரு பார்வை! சில வார்த்தைகள்! —உள்ளத்தை உலுக்கிவிட்டான், அந்த நடிகன்.

விழியும், மொழியுமல்ல – காண்போரின் கண்களில் நீரைக் கொட்டச் செய்தது; அவன் சென்ற இடமும் அங்கு கண்ட காட்சியும்தான்!

சென்ற இடமோ, ஐக்கிய நாடுகள் சபை! சென்றவனோ, ஏழை!! காஷ்மீர் விவாதத்தில் கலந்து கொள்ளவோ, கொரியப் பிரச்னை பற்றி வாதாடவோ, சர்வதேச பொருளாதாரப் பிரச்னைபற்றி சங்கநாதம் செய்யவோ அல்ல – அவன் சென்றது. ஏழை, எப்படி, இதற்கெல்லாம் அருகதை பெறமுடியும்? தஞ்சம் புகச் சென்றான்! தன்னைத் துரத்தி வரும், அமெரிக்கப் போலீசாரிடமிருந்து, தப்புவதற்காக நுழைந்தான்!! தன்னுடைய 'நிலை'யைக் கூறி–உலகத்தில் நீதியும் நேர்மையும் நிலவப் பாடுபடும் ஐ. நா. சபையினர் முன் — நீதி பெறச் சென்றான்!!

அங்கே அவன் கண்ட காட்சி—அவன் திரும்பிப் பார்த்த பார்வை–செப்பிய சில வார்த்தைகள்—சினிமா பார்த்தோரின் சிந்தனையையெல்லாம், தூண்டிவிட்டது.

*

கடந்த போரில், எதிரிகள்வசம் கைதாகிக் கிடந்த 'ராணுவக் கைதி'களை யெல்லாம் ஏற்றிக்கொண்டு, அமெரிக்கக் கப்பல் ஒன்று, அமெரிக்காவைச் சேர்கிறது. அந்த ராணுவக் கைதிகளில் ஒருவன்தான், நம்முடைய கதாநாயகன். கைதிகளில் பலர், துறைமுகத்தில் இறங்கியதும், தத்தமது 'பாஸ்போர்ட்டை'க் காண்பித்துவிட்டுச் செல்லுகின்றனர்— 'பாஸ்போர்ட்' இல்லாத பலரை, உறவினரும் நண்பரும் வந்து அடையாளம் காட்டி அழைத்துச் செல்லுகின்றனர். ஆனால், அவனுக்கோ, யாரிடமிருந்தும் அழைப்பு இல்லை! அடையாளம் கூறுவோரும் இல்லை!! ஏனெனில், அவன், ஒரு அமெரிக்கன் அல்ல — அந்நியன்! அந்நியனை உள்ளேவிட மறுக்கின்றனர்—அதிகாரிகள்.

"உன்னை அடையாளங் காட்டக் கூடிய யாராவது இருக்கிறார்களா?"

"இருக்கிறான், ஒரு தோழன்! அவனும் நானும் ஒரே இடத்திலிருந்தோம். ஒரு ஆபத்திலிருந்து அவனைக் காப்பாற்றியிருக்கிறேன், நான். அவனோடு வாழத்தான், இங்கு வந்தேன்"

"அவன், விலாசம்?"

"ஊம்... நினைவில்லை! தெரியாது!–ஆனால், இதோ இந்த 'ரிஸ்ட்வாட்ச்' அவன்தான் கொடுத்தது!"

"இது போதாதே, உன்னை இன்னாரென்று நிரூபிக்க! ஆகவே, நீ, திரும்பிவிட வேண்டியதுதான்"

"எங்கே?"

"உன் ஊருக்கு!"

"எனக்கு யாருமில்லையே!"

'உன்னை இங்கேவிட, எங்களுக்...
அதிகாரமில்லையே!"

ஏழையை இழுத்துக் கொண்...
போய், கப்பலில் வைத்துவிடுகின்...
னர். எதிரில் ஜொலிக்கும் நகர...
அங்கே நடமாடும் மக்கள் வெள்ள...
—இவனோ, தனியே—கப்பலி...
இந்த நிலைமை பொறுக்க முடிய...
மல், அங்கிருந்து தப்புகிறான்–
போலீசாரையெல்லாம் தாண்...
நகருக்குள் நுழைந்துவிடுகிறா...
அதிகாரிகள், அவனைத் துரத்...
கின்றனர்—அவன் ஏழையாயிரு...
தாலென்ன, எவனாயிருந்தாலென்...
அந்நியன் அல்லவா? — அனும...
யில்லாமல், அவன் உலவலாமா–
ஆகவே, அவனைத் தேடுகின்றனர்...

அனாதையான அவனுக்கு, அமெ...
ரிக்க நண்பன்தான் உயிர்—வாழ்...
எல்லாம்! அவனையோ காணமுடி...
வில்லை! அதிகாரிகளோ, தேடுகி...
கள்!!

அவதியடைந்த அவன்—ஐக்...
நாடுகள் சபைக்காவது போய், அமெ...
ரிக்காவில் வாழ அனுமதி பெ...
லாம்—அது, உலகத்தில், ...
நேர்மை நிலவப் பாடுபடும் இ...
என்று கூறுகிறார்களே — எ...
ஆசையோடு நுழைகிறான்! நுழை...
ததும் அவன் கண்ணில், மனி...
உரிமை பாதுகாக்கும் கமிஷனின்
அறையே, தென்படுகிறது. ...
மகிழ்ச்சி அடைகிறான்! அல்ல...
போய்விட்டதென்ற ஆனந்த...
மனித உரிமை பாதுகாக்கும் கமி...
னுயிற்றே–தானும் மனிதன் தா...
—தான் வாழ்வதற்கான உரிமை...
அது பாதுகாத்துத் தருமல்லவா...
பயமுறுத்தும் போலீசாரின் ...
பிடியிலிருந்தும் தப்பலாமல்லவா...
அந்த ஆனந்தம் அவனுக்கு. ...
சாத்தோடு, அந்த அறைக்கு...

நுழைகிறான்! அழகான நாற்காலிகள்—அதற்குமுன் கருத்தைக் கவரும்படியான மேஜைகள் — அவைகளில், 'இது இந்தியா!' 'இது அமெரிக்கா! 'இது பிரிட்டன்' என்று ஒவ்வொரு நாட்டையும் குறிக்கும் போர்டுகள்—கண்ணைக் கவரும் வர்ண விளக்குகள்—குளு குளுவென்று வீசும் காற்று—அழகுமயமாக விளங்குகிறது, அச்சபை. அதற்குள் நுழைந்தான் — அறையின் நாலு பக்கங்களையும் பார்த்தான். மனித உரிமை கேட்கவந்த அவன் கண்களில், ஏமாற்றம்! ஏனெனில், அழகு – ஆடம்பரம்—அற்புதமான ஜோடிப்பு எல்லாம் இருந்தன. ஆனால், அங்கே யாருமில்லை! வெறிச்சோடிப்போன நாற்காலிகள்மட்டுமே இருந்தன!!

*

"மனித உரிமை மறுக்கப்படுகிறது, எனக்கு. அதனைப் பெற ஓடோடியும் வந்தேன். ஒருவரும் இல்லை, இங்கு. இது மனிதஉரிமை பாதுகாக்கும் இடம்! இதன் லட்சணம் இப்படியிருக்கிறது. இதற்கு, இவ்வளவு பெரிய கூடம்—அழகு-ஜோடிப்பு-எல்லாம். ஒண்ட இடமின்றி, ஏழையாக, 'இடமில்லை' என்று வெறுக்கப்பட்டவனாக—ஓடிவருகிறேன், நான். ஒருவார்த்தை கூற, யாருமில்லை இங்கு! இடம்-பிரம்மாண்டம். பொருளும், பெரிது. ஆனால், யாரும் இல்லை, என் குறைகேட்க!!"

*

'ஐக்கிய நாடுகள் சபை'—யினைப் பற்றி மிக அழகாக, இந்தப் படம் சித்தரிக்கிறது. படத்தைத் தயாரித்தது, ரஷ்யா அல்ல! அமெரிக்க ஸ்டுடியோ! ஐ. நா. சபையின் கட்டிடம் பெருமிதமாக விளங்கும், அமெரிக்காவிலிருந்தே, இப்படி ஒரு படம்! பெயர் என்ன தெரியுமா? கண்ணாடிச்சுவர்! படத்தின் பெயர், உள்ளங்களைத்தட்டி எழுப்பக்கூடியதாகும் கண்ணாடிச் சுவர் எது?—ஐ. நா. சபை. அதனை, அழகான காட்சியொன்றின் மூலம், எடுத்துரைத்தனர், அந்தப் படத்தில். கதாநாயகனைப் போலீசார் துரத்திவருகின்றனர் – அவனோ. 'ஐ. நா. சபை எங்கே? எங்கே' என்று தேடியவண்ணம் ஓடி வருகிறான் — எதிர்ப்படும் ஒவ்வொருவரையும் கேட்கிறான். ஒருவர், கூறுகிறார்.

"தம்பி! அதோ, பார்! பளபளவென்று ஆகாயமளாவ, விளங்குகிறதே அதுதான், நீ கேட்ட கட்டிடத்தின் அடையாளம் தெரிகிறதா? கண்ணாடி மயமாக விளங்குகிறதே அதே கட்டிடம்தான்!"

*

கண்ணாடிச்சுவர்!—நிரம்பியதாகத் திகழ்கிறதாம், அச்சபை. அமெரிக்க திரைப்படம், அறிவிக்கிறது இதனை! பார்ப்போரின் இதயத்தில் பலதரப்பட்ட எண்ணங்களை எழுப்பும் காட்சிகளைக்கொண்டு. கண்ணாடிச் சுவர்—எவ்வளவு வேதனையும் கிண்டலும், நிரம்பிய பெயர்!

உலகைப்புரக்கும் உன்னதமான சபை என்று, அமெரிக்க ஏடுகள், தெந்தினம் பாடுகின்றன—உலகமும் நம்புகிறது.

ஒவ்வொருமுறை சபை கூடும் பொழுதும், உலக நாடுகள் யாவும் தத்தமது பிரதிநிதிகளை அனுப்பி, அச்சபையின் நாற்காலிகளை நிரப்புகின்றன.

உலகத் தலைவர்கள் பேசும் போதெல்லாம், அச்சபையின் முக்கியத்துவம் குறித்து, வலியுறுத்தாமலிருப்பதில்லை.

அத்தகைய சபையை — கண்ணாடிச் சுவர்! என்று காண்கிறோம் படத்தில்.

படத்தில் மட்டுமல்ல, அச்சபையின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வந்த யாரும்—உலக நன்மைகளில் உள்ளம் பதித்த எவரும்—அந்த முடிவுக்குத்தான் வருவர்.

ஐ நா. சபையின் வெளித்தோற்றம், பிரமிக்கத்தக்கதாயிருக்கிறது! ஆனால் உள்ளே, சென்றாலோ, எல்லாம் காலி!!

*

உலகத்தில் நீதியும் சமாதானமும் நிலவவும்—எங்கும் இன்பம் நிரம்பவும்—ஏழை நாடுகள் வசதிகள் பெறவும்—உலக மக்கள் 200 கோடி பேரும் உல்லாசமான வாழ்க்கையை அனுபவிக்கவும்—இதற்கான ஒத்தாசைகளை எல்லோரும் செய்யவும்-நல்லபலதிட்டங்களை எடுத்துக் கூறியபடி இச்சபை ஆரம்பமாயிற்று.

ஆனால், இன்றோ! வல்லான் வகுத்ததேவழி என்று, அமெரிக்கா இட்ட கட்டளைப்படி, ஆடுகிறது. நீதியும் நேர்மையும் மங்கிவிட்டன! மனிதனை ஆட்டிப்படைக்கும் பஞ்சமும் பட்டினியும் ஒழியவில்லை — உலக மக்களில் முக்கால்வாசிப்பேர் மூடமதியினராய், முதுகெலும்பு வளைந்தவராய், 'சாவே வா!' என்று சஞ்சலநாதம் எழுப்பியபடி. தவித்துக் கிடக்கின்றனர்.

போரும் குரோதமும் மறைந்து விடவில்லை—பொறாமையும் போட்டிப்பூசலும் குறைந்துவிடவில்லை—காஷ்மீரக் களத்தில் இரத்தம் ஆறாக ஓடிற்று—கொரியாவில் பிணமலைகள் நிரம்பின—சைனாவில் குண்டு மாரியைப் பொழிந்தனர் அமெரிக்கர்—அரும்பி மலர்ந்து விட்ட செஞ்சீனாவை, இன்னும் 'ஒருநாடு' என்று ஏற்றுக் கொள்ளவில்லை, அச்சபை.

தனி மனிதனின் வாழ்வும் துலங்கவில்லை!

நாடுகளின் போட்டா போட்டியும், சமர்க்குணமும் ஓயவில்லை!!

பளப்பளக்கும் கண்ணாடிச் சுவராகக் காட்சி அளிக்கிறது, ஐ நா. சபை.

அங்கே, இந்த ஆண்டுத் தலைவராக, இயந்தியப் பிரதமரின் சோதரி விஜயலட்சுமி அம்மை, தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறாராம்.

சபையின் தலைவராக, அமரும், முதல் பாக்யம் பெற்ற, தோழியர் விஜயலட்சுமியார் தேர்ந்தெடுக்கப் பட்டது இந்தியாவுக்கு வெளி நாடுகளில் உள்ள செல்வாக்கைக் காட்டுகிறதாம்— இப்படியெல்லாம், எழுதப்படுகிறது.

தோழியர், 'உன்னதமான' ஒரு இடத்தில், அமர்வது காண, நாமும் அகமகிழ்கிறோம் — அவர், ஓர், பெண் என்பதால்.

ஆகவே, 'அந்த இடத்தைப் பிடிக்க', எப்படியெப்படி இந்திய சர்க்கார் முயற்சித்தது—அமெரிக்காவை மிரட்டியது—பாகிஸ்தானுடன் நேசம் காட்டியது—என்னும், பல விஷயங்களைக் கிளற விரும்பவில்லை.

ஆனால், அந்தக் 'கண்ணாடி வீட்டில்', நம்முடைய அம்மையார் அமர்ந்ததற்குக் காரணம், பண்டிதரின் வெளிநாட்டுக் கொள்கை தந்த வெற்றியெனக் கூறப்படுகிறதே, அதைக் காணும்போதுதான், நகைப்பு ஏற்படுகிறது, நமக்கு.

காளிகோயிலில் 'பலியிடும்' விழாவைப் பார்த்திருக்கலாம் பலர். சில ஆடுகள், முரண்டும். அப்படிப்பட்ட ஆடுகளை இழுத்து வந்து புல்லைக் காட்டுவான், பூஜாரி. அது, ஆவலோடு, புல்லைத் தின்னும்—அப்போது, கத்தி, விழும்!

அதே போலத்தான், இன்று அம்மையாரை, அந்த ஆசனத்தில் அமர்த்தியிருப்பதும்.

ஐ. நா. சபை, ஆரம்பித்தது முதல் இன்றுவரை, அமெரிக்கா ஆட்டி வைத்தபடி ஆடிவருவதை அனைவரும் அறிவர் — 'செஞ்சீனாவைச் சேர்க்கக் கூடாது' என்று, அது செப்பிவிட்டால், இந்தியா முயன்றாலும் ரஷ்யா கோபித்தாலும் — அமெரிக்காவின் விருப்பத்துக்குச் சாதகமாக 'வோட்' கிடைக்குமேயொழிய, விஜயலட்சுமியின் வேண்டுகோளோ, பண்டிதரின் முகவிலாசமோ, பயன் தந்ததில்லை. சீனப்பிரச்னையில் மட்டுமல்ல, அநேகமாக எல்லாப் பிரச்னைகளிலும் அமெரிக்கா விரும்பியபடிதான், காரியங்கள், நடைபெறுகின்றன.

ஆகவே, விஜயலட்சுமியாரை, எல்லா நாடுகளும் விரும்பி இந்தியாவின் ஜோதியைக் கண்டு மயங்கியல்ல, இன்று தலைவராகத் தேர்ந்தெடுத்தது.

அமெரிக்கப் பூஜாரி, தன்னுடைய அக்கிரமப் பலி விழாவிற்குமுன் அறுகம்புல்லை, நீட்டியிருக்கிறான். அது தான், இந்தப் பதவி!

*

கடந்த சில மாதங்களாக, அமெரிக்க ஆதிக்கத்துக்கு, பல இடங்களில் தோல்வி ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்காவுடன் கூடிக் குலாவி மகிழ்ந்தோரில் பலர், தத்தமது அதிருப்தியை வெளியிட்டிருக்கின்றனர். பல இடங்களில் ஏற்பட்ட அரசியல் சதிகளின் 'சூத்ரதாரி'களாக, அமெரிக்கர் கருதப்படுகின்றனர். காஷ்மீரத்தில் விளைந்த கலாம், அமெரிக்க ஆதிபத்தியத்தின் சதி என்று கருதப்படுகிறது—ஈரானில் நடைபெற்ற 'முஸாதிக் வீழ்ச்சி'க்கும் முக்கிய தூண்டுகோல், அமெரிக்கா என்று பேசப்படுகிறது — மொராக்கோவில் நடைபெற்ற அரசியல் மாற்றத்துக்கும், அமெரிக்காவின் சதியே என்று எண்ணப்படுகிறது — இவ்வண்ணம், அகில உலகில் நடைபெறும் அத்தனை 'நல்லது கெட்டது'களுக்கும் அமெரிக்காவுக்குமிடையே. சம்பந்தமிருப்பதாகக்கருதப்படுகிறது. குறிப்பாக, ஏழ்மைத்தனையும், இல்லாமைக் கொடுமையும் நிரம்பி, அந்நியர்களுக்கு ஆட்பட்டுக் கிடக்கும் ஆசிய நாடுகளிடையே, இந்த மன அதிருப்தி, மலைபோல் வளர்ந்து கிடக்கிறது. பிரெஞ்சுப் பிடியில் சிக்கிச் சின்னாபின்னமாகும் இந்தோசீனாவில் நடைபெறும் உரிமைப் போராட்டத்தை அடக்க, அமெரிக்கா, முயல்கிறது என்று அங்கே, அதிருப்தி! மலேயாக்காடுகளில் மக்களை, 'பயங்கரவாதிகள்,' என்று சொல்லி, வேட்டையாடும் வெள்ளையர்களின் கொடுமைக்கு, டாலர் பூமி, கைலாகு கொடுப்பதாக, அங்கே—குமுறல்! பக்கத்து நாடு பர்மாவை, பல்லிளிக்கும் பொம்மையாக்க, முயல்வதாக, பர்மிய மக்களிடையில்—ஆத்திரம்! இவ்வண்ணம், அமெரிக்கா குறித்து, ஆசிய நாடுகளிடையில் அவநம்பிக்கையும் அதிருப்தியும், அரசோச்சுகிறது.

இந்த அவநம்பிக்கையை அதிகப்படுத்துவதுபோல், கடந்த சில மாதங்களாக, இந்தியா, அமெரிக்கா மீது குற்றச்சாட்டுகளை வீசத் துவங்கியுள்ளது.

ஆசிய நாடுகளில், இந்தியாவைத் தம் வசமிருந்து, இழப்பதன் ஆபத்தை — அண்மையில், அமெரிக்க ஏடுகள், மிக மிக வலியுறுத்தி வருகின்றன.

அட்மிரல் நிமிட்ஸ் காஷ்மீரத்துக்கு வேண்டாம்—நேபாளத்தில் அமெரிக்கர் ஆதிக்கம்பெற முயற்சி. சீனாவை, ஐ. நா. சபையில் இடம் பெறாமல் செய்வதற்கு மூலகாரணம் அமெரிக்காவே— இவ்வண்ணம், இந்தியாவில் வளர்ந்துவரும் கருத்துக்களை, கவலையோடு கவனித்து வருகிறது, அமெரிக்கா.

அதனால், இந்தியாவின்மீது, தனக்குள்ள அன்பையும் ஆசையையும் காட்டிக்கொள்ளவேண்டிய அவசியம் நேர்ந்திருக்கிறது.

அந்த அவசியத்தின் விளைவாகவே, தோழியர் விசயலட்சுமியின் அபேட்சையை, அமெரிக்கா, ஆதரித்திருக்கிறது — வெற்றி பெறச் செய்திருக்கிறது. இந்த வெற்றியின் பெருமைக்குக் காரணம், விசயலட்சுமி தேவியாரின் சொந்த மேதையோ, அறிவின் சிறப்போ, அவர் பண்டிதரின் தங்கையெனும் புகழோ, அல்ல. விசயலட்சுமிக்கு பதில் ஒரு வீராசாமி, நிறுத்திவைக்கப்பட்டிருந்தாலும், வெற்றிபெற்றிருக்கமுடியும்.

இந்தியாவை, 'தாஜா' செய்ய வேண்டிய நிலையில் அமெரிக்கா, இருக்கிறது.

ஆகவேதான், இந்த வெற்றியினை 'பலி ஆட்டுக்கு'த் தரும் 'அறுகம் புல்' என்றோம். அந்த 'புல்லை'ப் பெற இந்தியாவும் பல நாட்களாக அதிதீவிரமான சிரத்தைக் காட்டிற்று. கானல்நீரைப் பருக விரும்பும், மானைப்போல. கானல்நீர் காட்சியும் வழங்கப்பட்டிருக்கிறது- கண்ணாடி வீட்டுக்குள் 'தலைவி'யாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார் தோழியர்—மான், புலியின் வாய்க்குள் வீழுமா! மனிதர்களின் வாழ்வை, ஆதிபத்ய உலகிலிருந்து விடுவிக்கப் பாடுபடுமா!!—என்பது, பொறுத்திருந்து, பார்க்கவேண்டிய விஷயம்.

அமெரிக்கத் திரைப்படம் காட்டியதுபோல, அது, ஓர் "கண்ணாடி வீடு" அங்கே கொலுவீற்றிருப்பதாலோ, கோலோச்சுவதாலோ, 'பார்! பார்! எங்கள் பாரதத்தின் பெருமையை!' என்று காட்டிக்கொள்ள முடியுமே தவிர, கண்ணீர் சிந்தும் உலகுக்கோ, களைத்துத் தவிக்கும் ஏழைக்கோ, எந்தவிதப் பலனையும் செய்யமுடியாது. ஏனெனில் அது, ஓர் 'கண்ணாடி வீடு!'

மீ. சு. இளமுருகுபொற்செல்வியார்
அழகுபடத் தீட்டியுள்ள
'ஆடும்
ஆச்சாரியார்'
என்ற நூலில்
ஆச்சாரியாரின் அடக்குமுறை
ஆட்சிபற்றிய விளக்கங்கள்
அடங்கியுள்ளன.
விவரங்கட்கு:-
நம் நாட்டுப் பண்ணை,
மணப்பாறை, திருச்சிமாவட்டம்.

வாழ்த்துகிறோம்!

வளம்பெறச் செய்வோம்!

ஐந்தாம் ஆண்டில் நுழையும் ரேத்தில், கழகத்தைக் கட்டிக் காக்கும் முன்னணி வீரர்களின், உற்சாகத்தையும் ஊக்கத்தையும் எண்ணிப் பாராமல் இருக்கமுடிய வில்லை. ஆங்காங்கும் கிளைக் கழகங் களைத் தோற்றுவிப்பதிலும், கழகக் கொள்கைகளை ஏந்தி, மக்கள் மன றத்துக்குள் பவனி வருவதிலும், மது வீரர்களாற்றும் பணியினைக் கண்டு, மாற்றாரும் மயங்குவர். கழ கத்துக்குள் இலட்சக்கணக்கான தோழர்களைக் கொண்டுசேர்த்திருக் கும் பெருமை யனைத்தும், இவர் களையே சேரும். இந்த மாவீரர் களை, இந்த நல்ல நாளில் வாழ்த்து கிறோம்! இவர்கள் அனைவரும், தம் முடைய உழைப்பையும், பொது லத் தொண்டினையும் காட்டி, கழ கக் கோட்டையின் முன்னணிவீரர் களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்க ளாகும்.

இந்த அரும்பெரும் காரியம், டந்த நான்காம் ஆண்டில், ஜன ாயக ரீதியில், நடைபெற்றது.

அவ்வண்ணம், தலைமைக் கழகப் பொதுக் குழுவுக்குத் தேர்ந்தெடுத் த்த தோழர்களின் பட்டியலும் — மாவட்டக் கழகச்செயலாளர்களின் விபரமும் — கழகக் காரியங்களை இயக்கும் செயற் குழுவினராகப் பொதுச் செயலாளரால் அமைத் துக்கொள்ளப்பட்டோரின்விபரமும் கந்துள்ளோம்.

இவர்களே, திராவிட முன்னேற் றக் கழகத்தின் நரம்புகள். இவர்கள் அனைவரையும் வாழ்த்துகிறோம் — இவர்களுக்குப் பின்னால் தேங்கிக் டக்கும் கிளைக் கழகச் செயற்குழு னர், உறுப்பினர், ஆகியோரின் பரம்தர, நாட்டால் முடியாது — னினும், நமது இதயத்தில் இருக் றார்கள். அவர்களின் துணை காண்டு, கழகத்தை, வலிவுள்ள ாக்குவோம் எனும் உறுதியை டுத்துக்கொண்டு, மீண்டும் அவர் களுக்கு நம் வாழ்த்தையும் வணக் கத்தையும் தெரிவித்துக்கொள்கி றோம்! வாழ்க செயல் வீரர்கள்!!

மாவட்டச் செயலாளர்கள்

சென்னை:-
கே. எம். கண்ணபிரான்

செங்கற்பட்டு:-
சி. வி. எம். அண்ணாமலை

வட ஆற்காடு:-
ஏ. எல். சி. கிருஷ்ணசாமி

தென் ஆற்காடு:-
ஆர். பாலகுருசாமி

தஞ்சை:-
கே. கே. நீலமேகம்

திருச்சி:-
ஏ. பி. தர்மலிங்கம்

இராமநாதபுரம்:-
சிவ. சண்முகசுந்தரன்

நெல்லை:-
எஸ். வீரபாகு

சேலம்:-
ஜி. பி. சோமசுந்திரன்

கோவை:-
ஈ. வெ. கி. சம்பத்

மதுரை:-
எஸ். வி. தொந்தி

பொதுக் குழு

சென்னை

கே. கோவிந்தசாமி
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.
என். வி. நடராசன்
அருண்மொழி பி. ஓ எல்.
கே. எம். கண்ணபிரான்
சத்தியவாணிமுத்து
காஞ்சி மணிமொழியார்
ஆர். பாண்டியன்
கா. அண்ணாமலை
ஏ. கே. சாமி
சி. வி. ராசன்
அ. பொ. அரசு

செங்கற்பட்டு

சி. என். அண்ணாதுரை எம். ஏ.
இராம. அரங்கண்ணல்
காஞ்சி. கலியாணசுந்தரம்
சி. வி. எம். அண்ணாமலை
கே. டி. எஸ். மணி
என். ஜி. கண்ணப்பன்
எஸ். ஜி. பெருமாள்
டி. சபாபதி
தில்லை-வில்லாளன் (பி. ஏ. ஆனர்ஸ்)
ஒய். என். ராமலிங்கம்

வட ஆற்காடு

பி. ராமலிங்கம்
ஆர். சம்பங்கி
கே. பி. சுந்தரம்
வி. டி. அண்ணாமலை
எஸ். டி. ராமசாமி
இளஞ்செழியன்
நெடுஞ்சோழன்
ஏ. எல். சி. கிருஷ்ணசாமி
டி. ஜி. தங்கவேல்
என். எம். சலாவுதீன்

தென் ஆற்காடு

இரெ. இளம்வழுதி எம். ஏ.பி. எல்.
ராசகோபாலன்
ஆர். பாலகுருசாமி
பழனியப்பா
சி. முனுசாமி
பெ. நெடுமாறன்
டி. என். ஜி. அண்ணாமலை
ஏ. நாராயணன்
என். இமயவரம்பன்
கனகசபாபதி

தஞ்சை

என். எஸ். இளங்கோ
மு. கருணாநிதி
டி. கே. சீனிவாசன்
கே. கே. நீலமேகம்
ப. நாராயணசாமி
ஏ. கே. வேலன்
ஆர். பழனிச்சாமி

எஸ். பெத்தண்ணன்
எஸ். கே. சாமி
வை. சுப்ரமண்யம்

திருச்சி

இராசு
ஞானமுத்து
இளமுருகு பொருட்செல்வி
கே. எ. முருகேசன்
முத்துக் கருப்பன்
செல்லப்பா
எம். எஸ். மணி
எ. பி. தர்மலிங்கம்
ஜி. பராங்குசம்
டி. பி. அழகமுத்து

இராமநாதபுரம்

எ. வி. பி. ஆசைத்தம்பி
எஸ். உத்தண்டன்
சிவ. சண்முகசுந்தரன்
எம். எஸ். ராமசாமி
இராம. சுப்பையா
இராம. வெள்ளையன்
சவுந்திர பாண்டியன்
ஆ. சுப்பையா
சேதுராமன்
து. உ. ராமநாதன்

நெல்லை

எஸ். கலிங்கன்
இராசு. தங்கப்பழம்
எஸ். கந்தசாமி
ப. புகழேந்தி
எம். எஸ். சிவசாமி
வீரபாகு
டபள்யு. டி. துரைசாமி
ஆர். பாண்டியன்
எஸ். நடராஜன்
எம். ரத்தினம்

சேலம்

ஜி. பி. சோமசுந்திரம்
ப. கண்ணன்
இரா. ஜெகநாதன்
பி. ஆர். சோமசுந்தரம்
பி. ராமலிங்கம்
இரா. தாண்டவன்
பி. எம். குப்புசுவாமி
ரா. வரதராசன்
கே. எ. நடராசன்
இ. ஆர். கிருஷ்ணன்

கோவை

ஈ. வி. கே. சம்பத்
எஸ். அப்பாவு
கே. எ. மதியழகன்
பி. பழனிச்சாமி
எஸ். ஆர். சந்தானம்
ஜி. என். ராசு

செயற் குழு

கே. கே. நீலமேகம் (பொருளாளர்)
இரா. நெடுஞ்செழியன் (துணைச் செயலாளர்)
கே. ஏ மதியழகன் (துணைச் செயலாளர்)
ஈ. வெ. கி. சம்பத் (சட்டதிட்ட திருத்தக் குழு உறுப்பினர்)
மு. கருணாநிதி
என். வி. நடராசன்
சத்தியவாணிமுத்து
ஆசைத்தம்பி
நெல்லை. வீரபாகு
மதுரைமுத்து
திருச்சி எம். எஸ். மணி
சிதம்பரம் பாலகுருசாமி
நாகர்கோயில் ஜான்
சி. வி. எம். அண்ணாமலை
ஏ. எல். சி. கிருஷ்ணசாமி.

எஸ். எ. ராசமாணிக்கம்
வி. சண்முகநாதன்
பி. எம். பொன்னுசாமி
சி. எஸ். சின்னதுரை

மதுரை

கு. ப. ம. தர்மன்
கே. எஸ். ராசமான்
தா. ஆவுடையப்பன்
கே. வி. விக்கிரமாதித்தராசன்
எம். எஸ். பால்ராசன்
எஸ். வி. தொந்தி
கே. தங்கவேல்
கே. நடராசன்
வி. தியாகராசன்
எம் எஸ். பழனியப்பன்

மாவட்டத் துணைச் செயலாளர்களும் பொருளாளர்களும்

சென்னை
- க. சிதம்பரம்
- எ. கண்ணப்பன்

செங்கற்பட்டு
- டி. சபாபதி
- என். ராமலிங்கம்

வட ஆற்காடு
- கருத்தோவியன்
- தேவராசன்

தென் ஆற்காடு
- ஆ. தங்கவேலு
- இராம. பழனிசாமி

தஞ்சை
- எ. வி. பதி
- பராங்குசம்

திருச்சி
- ஜி. பராங்குசம்
- து. ப. அழகமுத்து

இராமநாதபுரம்
- இராம. வெள்ளையன்
- சவுந்திரபாண்டியன்

நெல்லை
- எஸ். கந்தசாமி
- எம். எஸ். முத்துக்குட்டி

சேலம்
- வி. ராமலிங்கம்
- பி. எம். குப்புசுவாமி

கோவை
- செழியன்
- எஸ். ஆர். சந்தானம்

மதுரை
- எம். அய்யாச்சாமி
- எஸ். கிருஷ்ணசாமி

தி. மு. க. தலைமை நிலைய ஆங்கில வெளியீடு

ஒவ்வொருவர் கையிலும்
இருக்கவேண்டிய ஆங்கில நூல்

The Answer

விலை 6 அணா

அண்ணா, மதியழகன், சம்பத், நெடுஞ்செழியன்,
என். வி. நடராசன்
ஆகியோர்
நீதிமன்றத்தில் தந்த வாக்குமூலங்கள்

விபரம்:- பத்மா பிரஸ், காஞ்சிபுரம்.

'அவர்' விஷயம்!

நெறியிலாதவனுக்கு நெறிகாட்ட
கொணாதானுக்கு ஒளி காட்ட
ஜோதி—ஆண்டவன்!

அசுத்தமான உலகில், சுத்தமாக
க்கவேண்டும் என்பதை விளக்க!

நாகரீக உலகில், நாகரீக போத
பின் நாதனாக விளங்க!

படம், வஞ்சகம், காய்ச்சல்,
லியன கொண்ட உள்ளத்திலே,
ணை, நேர்மை, அன்புடைமை முத
அருங்குணங்கள் உண்டாகச்
ய ஒரு குருநாதன்—ஆண்ட
, எங்கும் நிறைந்து—எந்தச்
யும் பெற்று — எல்லையில்லாத
பத்தின் வடிவமாகி, சத்திய
ரூபியாகி, சாட்சாத்காரமாகி,
ஜீவாத் மாக்களுக்கும் ரட்சக
, பதியாகி உள்ள பரமன் —
டவன்!"

டவுளைப் பற்றிக் கசிந்து கண்
மல்கி, பலர் கூறுவர் இது
ள்! ஆம்! நெறி, ஒளி, நீதி,
மை தூய்மை, அன்பு, —
வயே கடவுள். அறிவான தெய்
ம் எங்கும் நிறைகின்ற
ருளே! அன்பே சிவம்! உண்
யே ஆண்டவன்!—என்று பலர்
தித்தனர்.

வை இருக்கும் இதே இடத்
ல, கடவுட் கதைகள் வேறு
டு! தத்துவம் ஒரு புறம், தந்
ம் எனத்தாண்டவமாடும் தார்ப்
ரின் தந்திரக் காதைகள் பக்
லே! இவையும் சரி, அவையும்
ய என்று கொண்டு, "இடது
த்தூக்கி நின்றாடும்தெய்வமே"
பதற்கு, தத்துவம் இதுவென்
யும் கேட்டுக்கொண்டு, இடது
இன்னவர் இந்த நாள் இந்த
த்திலே இவ்வளவு சொகுசாகத்
கி நின்றாடும் காலை, இன்ன
திபதி, இத்தனை பெரிய
ந்தி இப்படிக் குலுங்கநகைத்து,
ம கொட்டாது பார்த்து, இன்
ன பரிசுகள் தந்தார் என்ற
நடவடிக்கையும் கண்டு, தத்
த்திற்கும் நடத்தைக்கும் உள்ள
த தன்மையைக் கண்டு தன
புழுவெனத் துடிக்காது,
கிணற்றுத் தவளைபோல் இருந்து
விடுகின்றனர்—மக்கள்— மக்களின்
தலைவர்களிலே பலர்!

உங்கள் கடவுள் இப்படி இருப்பார் என்று விநாயக உருவத்தைக் காட்டும்போது, அந்த வைதீகன் கன்னத்திலே, பகுத்தறிவாளனின் கரம் விளையாடும் காலம் விரைவிலே வரும் என்பது எம் துணிபு. உன் கடவுளின் வரலாறு இது, அவருடைய குணாதிசயம் இன்னவை என்று இன்றுள்ள புராணாதிகளைக் கூறினால், வேறு விதியற்றவர்கள் கேட்டுக்கொள்வர், செந்த மதியற்றவர்கள் பொறுத்துக்கொள்வர், சிந்தனாசக்தி உள்ளவர்கள் கேட்டுக்கொள்வார்களா! எனக்குத் தூய்மையான ஆண்டவன் வேண்டும், தீயன் வேண்டாம் என்று தீர்ப்புக் கூறும் காலம் வெகு தூரத்தில் இல்லை. கொஞ்சம்தெளிவு, சற்று சொரணை, நாடியிலே இன்னம் கொஞ்சம் முறுக் , மானத்திலே சற்று அதிகரித்த கவலை, அறிவிலே அக்கரை பிறக்கவேண்டும்.

பயபக்தியுடன் நீங்கள் கும்பிட்டு வணங்கப் போகும் விநாயகர் யார்? மூவருள் முதல்வர் என்று சைவர்கள் மார்தட்டிக்கொள்ளும் முக்கண்ணனின் மைந்தன்! கடவுள் என்றாலே எல்லாவற்றையுங் கடந்தவர் என்று பொருள். ஆனால், இங்கோ, கடவுளுக்குக் குடும்பம், பிள்ளைகுட்டி, பாத்தை முதலிய எந்தப் பாசமும் இல்லாமலில்லை. அத்தகைய சிவனாரும் உமையம்மையும், ஒருநாள் காட்டு மார்க்கமாக உலவிக்கொண்டிருந்தனராம், கடலோரத்திலே இதுபோது காதலர்கள் எதிரே திரைகடலும் இருதயத்திலே களிப்புக் கடலும், கடலிலே அலையும், மனதிலே கருத்தும் கொந்தளிக்க, நடந்து செல்வது போல! எல்லாவற்றையும் கடந்தவர், அங்கு இரு யானைகள், கலவி செய்திடக் கண்டாராம். கண்டதும், அவர் மனதிலே அலைமோதத் தொடங்கியது. மன்மதனைக் கண்ணால் எரித்தார் எங்கள் மகாதேவர் என்று பெருமையுடன் கூறிக்கொள்ளும் சைவர்கள், இந்தப் புராணத்தையும் பூரிப்போடு பேசுவர், இதைக் கூறியும் நீறு பூசுவர்! காட்டானைகளின் கலவியைக் கண்டதும், காமனைக் கருக்கியவருக்கு, உள்ளத்திலே காம உணர்ச்சி ஓங்காரமாகிவிட்டது! ஆம்! கடவுளுக்குத்தான் தோழரே இந்த உணர்ச்சி வந்தது! காட்டானைகளாகி கலவி இன்பத்தைக் கண்டு காமரசத்தை உண்டு களிக்க எண்ணினர். உமையும் சரி என்றார். இருவரும் யானை உருக்கொண்டனர். காட்டிலே, திருவிளையாடல் நடந்தது! அந்தப் போகப் பிரசாதமே, யானைமுகக் கணபதி! பிள்ளையார் பிறப்புக்கு இஃதோர் வரலாறு! இதன் ஆபாசத்தைப் பாரீர்! இத்தகைய ஆபாசத்தை ஆண்டவன் செயலென்று கூறிடும் அன்பர்களைவிட, கடவுளை நிந்திக்கும் கயவர் உண்டோ கூறீர். கருணாமூர்த்தி, கட்டுகளைக் கடந்தவர், மும்மலமற்றவர், பஞ்சேந்திரியங்களின் சேட்டைகள் பரமனை அணுகா என்று பேசுவதும், பின்னர், கண்ணுதற் கடவுள்; காட்டானைக் கலவி செய்யக்கண்டு, காமங்கொண்டு, கணபதியைப் பெற்றார் என்பதை உரைப்பதும், பேதமையன்றோ, பித்தமன்றோ, என்று கேட்க நமக்கு உரிமை கிடையாதா!

★

தமிழ்மொழி பற்றிய
சிறந்த நூல்!
அருமையானது!

தமிழ்

(எஸ். சதாசிவம்)

விலை ரூ. 1

தனிப் படி வேண்டுவோர்
ரூ. 1-8-0 அனுப்புக.

விற்பனையாளர்களுக்கு
25% கழிவு.

இன்பவாழ்வுப் பதிப்பகம்,
இரத்தினசபாபதிபுரம் P. O.

மதுரை

பொற்றாமரைக் குளத் திருப்பணி?

[பூவாளூர். அ. பொன்னம்பலனார்]

மதுரை மீனாட்சிஅம்மன் கோவிலுக்குள்ளிருக்கும் பொற்றாமரைக் குளத்தில் தண்ணீர் இல்லையாம்— இது மகா புண்ணியதீர்த்தமாம். தந்தையைக் கொன்று, தாயைப் புணர்ந்து, 'மாபாதகம்' செய்த தெய்வபக்தனுக்குத் திரு அருள் புரிந்து, பாவம் தீர்த்த பெருமையுடையதாம், பொற்றாமரைக்குளத் தீர்த்தம். இக்குளத்தில்நீர்இல்லாது வரண்டுபோய்க்கிடக்கிறது. கடவுள் பக்தி குன்றி, நாத்திகம் பரவி, மக்கள் உள்ளம் வரண்டு போய்க் கிடப்பதைப்போன்றதாம்இது. பொற்றாமரைக் குளத்தில் நீர்ஊற்று ஏற்படும் புண்ணியதிருப்பணியைச்செய்தால் மக்கள் உள்ளத்திலும் தெய்வபக்தி அருள் ஊற்று சுரக்கும் என்ற உயரியநோக்கத்தில், குன்றக்குடி அருள் நெறித்திருக்கூட்டத் தம்பிரான், பொற்றாமரைக்குளத் திருத்தொண்டிலீடுபட்டிருக்கின்றாராம். இந்தத் திருப்பணிக்குப் போதரவு புரிந்துபுண்ணியத்தில்பங்கு பெறும்படி பொதுமக்கட்கு காங்கிரஸ் பிரமுகர் அறிக்கையும்வெளியிடுகின்றார்

நம் நாட்டின் நிலை; மக்கள் நிலை; பொருளாதார நிலை; ஆகியவைகளை அறியாமல், மக்கள்வறுமையால்—பசியால், நலிந்து மடிவதையும், வேலையில்லாமல் வீதிகளில்பிச்சைஎடுத்து உயிர்வாழும், நெசவுத்தொழிலாளர்கள் நிலைமை, ஆகியவைகள் கண்களில் படாமல், உலக ஆசையை வெறுத்த மதத்தலைவர்கள் உயிர் வாழ்வதில் ஆச்சரியமில்லை. உலகம் மாயை, போக போக்கியத்தைத் துறந்து, மோட்ச வீட்டைத்தேடு, இறைவனடியைநாடு, என்று ஊருக்கு உபதேசம் செய்வதிலும், தங்கள் வாழ்க்கைப் பாதுகாப்புக்கு லட்சக்கணக்கான பொருள்களையும், ஆயிரக்கணக்கான நஞ்சை புஞ்சை நிலங்களையும் ஆதீனத்தின் சொத்துக்கள் என்று வைத்துக்கொண்டு பல்லக்கில் பவனி வருவதும், காவி ஆடையும் கழுத்தில் உருத்திராக்க மணிகளும், நீண்ட தாடியும், சடையும் தாங்கி, சமயத்தொண்டும், அருள் நெறித்தொண்டும், இலக்கியத் தொண்டும், மொழித்தொண்டும், செய்கிறார்கள், என்றாலும், தங்களை விளம்பரம் செய்து கொள்ளும் சுயநலக்காரர்களையும், அவர்களுடைய 'அடியார்க்கு அடியார்' என்று புகழ் பாடித்திரியும் ஏஜண்டுகளையும், இவர்கள் மூலம் புண்ணியச்சீட்டுபெறும்படி அறிக்கைகள்விடும் காங்கிரஸ் பிரமுகர்களையும், இவர்கள் எல்லோருக்கும் ஆக்கம் தரும் காங்கிரஸ் முதல் மந்திரி முதல் மடாலயமந்திரி நிதி மந்திரி உள்ளிட்ட பக்திப்பிரச்சாரம் செய்யும் தேசபக்தர்களையும் நன்குசிந்திக்கும்படி வேண்டுகின்றேன்.

நாம், மக்கள், பசி, வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், வெள்ளத்தால்பாதிக்கப்பட்டவர்கள் துன்பம், தீயினால் ஏற்பட்ட பெரும் சேதம், ஆகிய திக்கற்ற மக்கட்கு உதவிகள், செய்ய வேண்டுவது முக்கியமா? இடிந்த கோவிலைக் கட்டுவதிலும், பொற்றாமரைக் குளத்தை வெட்டித் திருப்பணி செய்வதிலும், கோபுரங்களைஉயர்த்திக் கும்பாபிஷேகம்செய்வதிலும், ஆலயங்களில் உற்சவங்கள் நடத்தி, ஆயிரமாயிரமாகப்பொருள்களையும் வீணாக்கி, மக்களை மேலும் மேலும் மூடத்தனத்திலும், அடிமைத்தனத்திலும், நிலைத்திருக்கும்படி செய்து, பார்ப்பனீயத்தையும், (ஆரியத்தையும்)பண்டாரக் கூட்டத்தையும், தலைவணங்கிபக்திசெலுத்தி, பொருள், அறிவு இழக்கும்படி செய்வது முக்கியமா? எது முக்கியம்? சிந்தியுங்கள்.

மக்கள் குடிக்கத் தண்ணீர் வசதி இல்லாத கிராமங்கள் ஆயிரக்கணக்கிலிருக்கின்றன. மருத்துவவசதிகள் இல்லாத ஊர்கள் பலப்பல. படிக்கப் பள்ளிக்கூடமில்லாமல் தினசரி பல மைல்கள் நடந்து சென்று படிக்கும் மக்களுள்ள குக்கிராமங்கள் பல இருக்கின்றன. நல்லரோடும், இரவில் வெளிச்சமும் இல்லாத இருண்ட கிராமங்கள் எண்ணற்றவைகள் உள்ளன. நகரங்களில் ரோடு ஓரங்களில் குடியிருக்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்களும், நகரத்தில் நாற்றம்பிடித்த பல பகுதிகளில் குடிசையில் வாழ்ந்திடும் பல்லா
யிரக்கணக்கான மக்
வாழ்க்கைக்கு வசதியுள்ள வீடு இ
லாமலும் துடிக்கும் பரிதாப நி
மைகள், பண்டாரக் கூட்டங்கட்கு
பிறவியில் மேல்சாதி என்று இ
மாந்திருக்கும் பார்ப்பனிய வைதி
வர்ணாச்ரமக் கூட்டத்திற்கும், க
வுள் பக்தர்கட்கும் சைவ மெய்ய
பர் திருக்கூட்டத்திற்கும் அரு
நெறி திருக் கூட்டத்திற்கும், க
களில் படாத காட்சியா? அல்ல
கருத்தில் புகமுடியாத நிகழ்ச்சிய
அரசிபலாரும், அவர் பாதந்
களும், நாட்டின் சீர்கேட்டை
போக்க வேண்டும்? அல்லது
கேடுகள் நாட்டில் வளரவிடா
தடைப்படுத்த வேண்டும். செய்
களா? செய்வார்களா? மந்திரி
கள், மாரியம்மன் கோவில் திரு
விழாவிற்கும், அனுமார் கோவி
கும்பாபிஷேகத்திற்குப் போவது
பொற்றாமரைக் குளத் திரு
பணிக்குப் போதரவு புரியு
கள், புண்ணியம் செய்தால் மோ
சத்தில் இடம் பெறலாம் என்
அறிக்கைகள் பத்திரிகைகளி
வெளியிட்டால் இவர்களைப் ப
பொதுமக்கள் என்ன நினைப்ப
கள்? பொற்றாமரைக் குளத்த
தண்ணீர், குடிக்கவும் பயன்பட
குளிக்கவும் பயன்படாது. ப
படர்ந்த அழுக்கு நிறைந்து தே
கிக் கிடக்கும் தண்ணீர். இந்
தண்ணீர் பாவம் போக்குமென்
பாவம் செய்கிற அயோக்கியர்க
பாவம் போக்கப் பயன்படலா
என்று கருதிக் கொண்டிருக்
பலர், பக்தர்களைத் தவிர, பொ
மக்கட்கும் பசியால் மெலி
பிச்சை எடுத்து வயிறு பிழை
மார்க்கமின்றி செத்துமடியும்
கட்கு ஏற்படும் பயன் எ
உழைத்து அலுத்த
உணவு கேட்டால் மோ
பெற வழி காட்டுகிறார்கள். மோ
சம் என்றால் செத்த மடி
என்ற பொருளானால் இதற்
தரகர்களும், ஏஜண்டுக
தேவை இல்லையே? — "அன்
சிவம்" "சிவமே அன்பு" எ
கொள்கையில் உண்மையான ப
தனிருந்தால் முதலில் மக்கள்
பத்தைப் போக்க அன்புப்
செய்தல் வேண்டும். இதுவே
வுடைமையாகும்.

✻

புது விளக்கம் பிறக்கிறது!

ஒட்டகத்துக்கு ஒரு சுபாவம்
டென்றுசொல்வார்கள். அதன்
பாரத்தை மேலும் மேலும்
ட்டால், பளு தாங்கமாட்டாமல்
டகம் முரண்டிக்கொண்டு
த்துவிடுமாம்! உடனே, சூட்சம
தியுள்ள ஒட்டகக்காரன், கடைசி
, ஒட்டகத்தின்மீது ஏற்றிய
ரனை எடுத்து விடுவானும்—
த்ததும், ஒட்டகம், சரி, சரி, நம்
போட்ட பாரத்தைக் கீழே
க்கிவிட்டார்கள், நாம் வெற்றி
ற்றுவிட்டோம் என்று எண்ணிக்
ண்டு, எழுந்து நிற்குமாம்,
பாணத்துக்குத் தயாராக! இந்த
டகத்தின் சுபாவத்தை, ஒருசில
பத்திலே நல்லவர்களிடமும்
லாம்.

ராவது நல்லவர்களுக்கு மன
னை ஏற்படும்படியான தொல்லை
ஏற்பட்டால், தாங்கமுடியாத
உண்டாகும் — உண்டாகும்
து இனிப் பொறுக்கமுடியாது
று கூறுவர்; ஆனால், ஒட்டகத்
சுபாவ சூட்சமம் தெரிந்தவர்
கொடுத்த தொல்லைகளிலே,
வதொன்றை நீக்குவர்—நீக்கு
ன்மூலம் நல்லவரின் மனதிலே,
சலம் குறைந்து, சந்தோஷம்
ந்து, சொன்னவண்ணம் கேட்
நிலை பெறுவதுண்டு!"

*

வ்வண்ணம், நான் காண்டு
க்குமுன்பு, இதே நேரத்தில்,
ணு அவர்கள், தீட்டினார்கள்.
ண்ணீர்த் துளிகளைச் சிந்திக்
ண்டிருந்த நேரம் அது.

ட்டு மக்களை, ஒட்டகச் சுபா
கொண்டவர்களாக, நமது 'தலை
கருதி, விசித்திரமான விளக்
னைத் தந்துகொண்டிருந்தார்—
போது.

ளக்கங்களுக்கு நேர்ந்த 'கதி'
யும்—உண்மைக்குக் கிடைத்த
சை'யும் நாடு, அறியும்.

ப்போது, அதேபோல, ஒரு
நாட்டு மக்களின் உள்ளத்தை—
கத்தின் உள்ளம் என்று

நினைத்து, பவனிவர முயல்கிறார்—தன்னுடைய தவறை மறைக்க, விசித்திர விசித்திரமான 'வியாக்யானங்களை'க் கூறத் துவங்கி யிருக்கிறார்.

வயோதிகம் வந்துவிட்டாலே, வாதங்கள்மூலம், தவறுதல்களைப் போக்கிவிடலாமெனும், துணிச்சல் வந்துவிடும்போலும். பாபம்! அந்த நம்பிக்கை ஒரு வழுக்குப் பாதையென்று அறியாததால், போலும் அன்பர் ஆச்சாரியார், பேசிவருவதும்.

புதிய கல்வித்திட்டம்! — நாடு, வெறுத்துவிட்டது.

வர்ணாசிரமக் கல்வித் திட்டம்!—நாடு தீர்ப்பு வழங்கிவிட்டது.

எங்கும் எதிர்ப்பு! 'வேண்டாம்!' எனும் முழக்கம்! கட்சி பேதம் இன்றி, எல்லோரும் — கொக்குக் குணம் படைத்தோர் தவிர-வெறுக்கிறார்கள்.

இந்தவெறுப்புணர்ச்சியைக்கண்டு 'வேதாந்தியாம் ஆச்சாரியார், தன், தவறினைத் திருத்திக்கொள்வாரென எதிர்பார்த்தோம்.

வயோதிகத் தலைவர்கள், வாலிப உலகைப் பார்த்து 'ஒட்டக சுபாவம்' கொண்டோரெனக் கருதுவது போலவே, இவரும் கருதுகிறார்.

ஒரு பளுவைக் குறைத்துவிட்டால் ஒட்டகம் கிளம்பிவிடும் — எதிர்ப்புக்குள்ள ஒரு காரணத்தை 'வாபஸ்' பெற்று விட்டதுபோல் காட்டிக்கொண்டால் எதிர்ப்புக் குறைந்துவிடும் — என்று, தப்புக் கணக்குப்போட்ட வண்ணம், ஊர் சுற்ற முனைகிறார்!

கல்வித்திட்ட எதிர்ப்புக்குள்ள, முக்கிய காரணம் — அது, குலத் தொழிலை வலியுறுத்துகிறது—அப்பன் தொழிலை மகனும் செய்ய வேண்டுமென்று வலியுறுத்துகிறது என்பதாகும்.

இதனையே அன்பர் ஆச்சாரியாரும், வலியுறுத்தினார்.

இதற்காகவே, இந்தக் கல்வித் திட்டத்தைக்கொண்டு வருவதாகக் கூறினார்.

இதனை விளக்க முயற்சிக்கையில், 'வண்ணார்களே! நீங்கள் உங்கள் தொழிலைக் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுங்கள். நாவிதர்களே! நீங்களும் அப்படிச் செய்யுங்கள்' என்றும் சலவைத் தொழிலாளி — க்ஷவரத் தொழிலாளி — என்று கூறுவது எனக்குப் பிடிக்கவில்லை, வண்ணான்—அம்பட்டன்—என்பதே இருக்கலாம்! என்றும், தைரியத்தோடு, பேசிக்கொண்டிருந்தார்.

தைரியம்! — மமதையாலும் தட்டிக்கேட்க ஆளில்லையெனும் செருக்கினாலும், ஏற்பட்டது அவருக்கு. அதனாலேயே, 'தகப்பன் தொழிலை மகனும் செய்யவேண்டும்' எனும் கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்தார்.

இதனை நாடு, காரியுமிழ்கிறது! நல்லோர், — சீச்சீ! — என்று செப்புகின்றனர்!!

இதனைக் காணும், ஆச்சாரியார், இது போது மேற்படி விஷயத்தை வலியுறுத்துவதில்லை-மாறாக, அந்த 'சுமை'யை இறக்கிவிட்டுவிட்டது போலக் காட்டிக் கொள்கிறார்! புது, விளக்கங்கள், தயாரித்துத்தருகிறார்!

அந்தப் புதுவிளக்கங்களில்ஒன்று —கன்னான் மகன் கவர்னராகலாம் —வண்ணான் மகன் கலெக்டர் ஆகலாம்—என்பதாகும். 'கல்கி'மூலம், இந்த விளக்கத்தைப் பறை சாற்றுகிறார்.

கல்வித் திட்டம், வருணாசிரம முறையைக்கொண்டதல்ல, என்பதற்கான விளக்கம், இது.

இதனை, வாராவாரம், 'கல்கி' ஏட்டிலும் — செல்லுமிடந்தோறும் கூட்டங்களிலும்—ஒலி பரப்புகிறார் தோழர் ஆச்சாரியார்.

'கனி இது! காணக்கிடைக்காதது!' என்று கண் கெட்டோன் ஒருவன், மலத்தைக் காட்டி மற்

றோரை உண்ணும்படி அழைக்க — கண்ணுள்ளோர், கண்டு நகைத்து 'பழமல்ல; மலம்' என்று உணர்த்தியபின் — அதைவிட்டு அப்புறம் போகாது, 'கனி இல்லை—உண்மை!— கனி இல்லை' என்று கூறிவிட்டால் போதுமா? காண்போர் இவர் 'கனி அல்ல' என்று கூறிவிட்டதால், நாகலை, எடுக்கவா, துணிவர்? நாகல், நாகல் தானே!

இதனை, அறியார் மக்கள் எனும் துணிவில், எல்லோரும் வெறுத்தொதுக்கிய புதிய கல்வித் திட்டத்தை—அது, கன்னான் மகனைக் கவர்னராக்குவது! வண்ணான் மகனை கலெக்டராக்குவது!!—என்று புதிய முலாம் பூசித்தர முயல்கிறார்.

இந்த முயற்சியின், இரண்டாவது 'கூத்தாக' ஆம்பூரிலே, அண்மையில் ஒரு மகாநாடு, நடைபெற்றிருக்கிறது.

அந்த மாநாட்டில்பேசிய அன்பர் ஆச்சாரியார், 'கல்கி' வெளியிட்டு வரும், புது விளக்கத்தைப்போல, மற்றோர், புது விளக்கத்தையும் தந்துள்ளார்.

படித்தோர்—படியாதோர், ஆகியோருக்கிடையே, நாட்டிலிருந்து வரும் தாரதம்யங்களைப் போக்கி, உழைப்புக்கு மதிப்பூட்டுமாம் இத்திட்டம்.

புது விளக்கம், நம்பர் இரண்டு இது.

ஒவ்வொரு குழந்தைகளையும், பாய் முடைதல், பானை செய்தல் முதலிய தொழில்களைக் கற்கும்படி செய்தால், அந்தக் குழந்தைகளுக்கு உழைப்பில் ஊக்கம் பிறக்கும். உதவாத 'குமாஸ்தா' படிப்பைப் படித்து, வேலை வேட்டையாடாமலிருப்பார்கள் — இவ்வண்ணம் 'நம்பர்' இரண்டுக்கு வியாக்யானம் தரப்படுகிறது.

இவ்விதம் தொழில் கல்வியில் அவர்களுக்கு விளக்கமளித்து விட்டால், படித்தோர் — படியாதோர் என்று சமுதாயத்தில் வளர்ந்து வரும், 'இரு ஜாதி'களையும் ஒழித்து விட முடியும்—என்றும், கூறப்படுகிறது.

நாட்டில், படித்தோர்—படியாதோர் என்று இருபிளவுகள், வளர்ந்து வருவதை, எவரும் மறுக்கார். படித்தோரின் நிலை வேறு! படியாதோர் நிலை வேறு!!

இந்த நிலைகளை ஒன்றாக்க, இந்தக் கல்வித் திட்டம், என்ன செய்யும்?

விளக்காமலா இருப்பார்; விளக்குகிறார், கேளுங்கள்:

"சமூகத்தில், இப்படியொரு பேதாபேதம் வளர்வதை தடுப்பது தான், இந்தக் கல்வித் திட்டம். என்சினீயராகப் படித்தவன், எல்லாம் தெரிந்து விட்டவன் போல, வருகிறான். அவனுக்கு, சுவர் கட்டத் தெரியுமா? அது, கொத்தனுக்குத்தான், தெரியும். ஆனால், என்சினீயர் தான் உயர்ந்தவனாக இருக்கிறான். காரணம், அவன், படித்தவனென்பதால். இந்தப் போலிப்படிப்பால் என்ன பிரயோசனம்? அதற்குப் பதில், என்சினீயர் பட்டம் பெற்றவன், கொத்தனிடம் சென்று பாடம் கற்கும்படி செய்ய வேண்டும். அப்போதுதான், உழைப்பாளிக்கு, கவுரவம் வரும் — அவனுடைய உழைப்பை எல்லோரும் உணர்வார்கள்,"

இவ்வண்ணம், பேசியிருக்கிறார். ஆச்சாரியாரின் இந்தப் பேச்சைக் கேட்கும் போது, பாமரமக்களுக்கு, 'அவர் கூறுவது பொருத்தம் தானே!' என்று தோன்றக் கூடும். ஏனெனில், சூட்டும் கோட்டும் போட்டுக் கொண்டிருக்கும் என்சினீயர், கொத்தனிடம் வர வேண்டுமென்றல்லவா, கூறுகிறார்? 'படித்தோரை'க் காணும் போது 'படியாத மக்களிடம்', சாதாரணமாக ஏற்படும், பொறாமையுணர்ச்சியைத் தூண்ட, இந்த விளக்கம் பயன் தருமேயன்றி, எங்ஙனம் கொத்தனின் வாழ்க்கையை, உயர்த்திவிட முடியும்? உழவனிடம் சென்று 'விவசாய டெமான்ஸ்டிரேடர்', ஒரு வருடகாலம், பயிற்சி பெறட்டும்—ஆட்சேபமில்லை, நமக்கு. ஆனால், அத்தகைய முறையால், உழவனுக்கு, என்ன பலன்? ஆச்சாரியார் கூறுவது போல், படியாத மக்களுக்கு, படித்தோர்பாலிருக்கும் ஆத்திரத்தையும் அருவருப்பையும் குறைக்க இந்தப் பயிற்சி, பலனளிக்குமே யொழிய, இதனால் உழவனும்,பிறரும், அடையக் கூடிய லாபம் என்ன?

அவனுக்கு, அகில உலக விஞ்ஞான முறைகள், விளங்கிவிடவா முடியும்—அ, ஆ, இ, ஈ தெரிந்து விடவா முடியும்—அன்றன்றாட

நிகழ்ச்சிகளைப் படித்தறிந்து விட... முடியும்?

கிராமங்களிலிருக்கும், பா... செய்தல் — பாய் முடைத... போன்ற, ஒவ்வொரு தொழி... களிலும், ஊக்கம் ஏற்படச் செ... வேண்டுமாம் ஏற்படட்டும்—ஆ... இந்த மாணவர்கள், அடை... போகும் நன்மையென்ன?

'டிராக்டர்' முறை வளரு... போது, ஏர் கலப்பையில் ஈடுப... செய்வதால், நலன் என்ன — வி... னப் பிரயாணம் செய்யும் காலத்தி... கட்டை வண்டி ஓட்டக் கற்று... கொடுப்பதால் பயன் என்ன—வி... ஞானம் வளரும்போது, படியாதோ... ரிடையில் அஞ்ஞான முறை... வளரும்படி செய்வதால் யாருக்... லாபம்?

ஒரு கிராமத்தில் ஒரு தச்ச... இருப்பதாக வைத்துக்கொ... வோம்—அவருக்கு ஐந்து குழந்... கள்—ஐந்தும் — தச்சுத் தொழி... லேயா, ஈடுபட விரும்பும்? — ... குழந்தையை, நல்ல எழுத்தா... ளாக்கி, இன்பம் காண விரும்ப... றான், அத்தகப்பன்—எங்ஙன... இயலும் — அவனுக்குத்தா... படிப்பு வரு முன்னரே, 'கல்... வசதி துண்டிக்கப்படுகிறதே.

அன்பர் ஆச்சாரியாரும், அ... தம் குழுவினரும், நாட்டிலிருந்... படித்தோர்-படியாதோர் என... இரு 'ஜாதி'களைக் காட்டி, அ... மூலம், கல்வித் திட்டத்துக்கு... கம் பெற முயலுகிறார்கள்.

இந்தப் பேதம், இருப்பதற்... ஏற்படுவதற்கும் காரணம் என்...

⊛ திரும்பிப் பார்...
கலைஞர் மு. கருணாநிதியின்
திரை வசனம்

'சென்சார்' கத்தரித்த
பகுதிகளுடன்.
சிறந்த முறையில்! 128 பக்க...
விலை 0—10—0
திராவிடப்பண்ணை
தெப்பக்குளம், திருச்சி.

இதைச் சிந்தியாமல், பேதத்தை ஒழிக்கப் போகிறேன்—கன்ஞன் மகன் கவர்னராகலாம் — என்று கூறுவதால், என்ன பலன், ஏற்பட முடியும்.

சமுதாயத்தில், படித்தோர்-படியாதோர் எனும் பேதங்கள் புறப்படுவதற்கு மூல காரணமே, பொருளாதார ஏற்றத் தாழ்வாகும்.

கந்தன், ஒரு விவசாயி — அவனுக்கு இருப்பதோ, காணி நிலம். குழந்தைகளோ, ஏழு. ஏழு குழந்தைகளும், உழவுத் தொழிலில் ஈடுபட விரும்பினால், காணி நிலம் போதுமா! ஒரு கை சோறு கூடக் கிடைக்காது, அவர்களுக்கு.

அவர்கள், அந்தக் காணி நிலத்தைத்தான், பாகம் பிரித்துக் கொண்டு வாழ முடியும்.

அதுபோல், சமுதாயத்தில், பணம் படைத்தோன்-பணமில்லாதோன், எனும் கொடூரப் பிரிவு இருக்கிறது — இதனால்தான், ஆச்சாரியார் குறிப்பிடும் படித்தோர்-படியாதோர் பூசல் எழும்புகிறது.

இதனை அறியவேண்டும், அவர்—ஆனால், அந்தப் பக்கமே போக விரும்புவதில்லை — நான் விரோதி நெம்பர் 1, என்று முழக்கமிடுகிறார்.

ஆனால், தான் கொண்டுவந்த அக்கிரமக் கல்வி முறைக்குப் பயங்கர எதிர்ப்பு உருவாகிவிட்டதென்பதைக் கண்டதும், 'ஓட்டைச் சுபாவத்தை, எண்ணி, ஒரு சுவரை இறக்கிவிட்டதுபோல், பாவனை செய்வதும், புது விளக்கம் தருவதும் போன்ற காரியங்களைச் செய்வதுமாக இருக்கிறார்.

நம் நாட்டில், நான்கு கோடி மக்கள் வாழ்கிறார்கள். ஆனால், அவர்களின் வாழ்வெல்லாம் 400 பணக்காரர்கள் கையில் ஆடிக்கொண்டிருக்கிறது— அந்தக் கொடுமையைப் போக்க முன் வராமல், உழைப்பை உயர்த்துகிறேன் எனும் உபதேசத்தைச் செய்வதால், என்ன லாபம்!

உழைப்பவன் இன்று காண்பதென்ன!—வண்டி இழுக்கும் வரதனிடம் சென்று கேளுங்கள்—கிராமத்துக்குச் சேவை செய்யும் நாவிதனிடம் சென்று கேட்டுப் பாருங்கள்—ஏரோட்டி, கழனி சென்று, களைத்துத் திரும்பும் காத்தானிடம் சென்று பேசிப் பாருங்கள்—உழைப்பின் பெருமையையா கூறுகிறான்—'ஐயோ, நான் வந்த விதி', 'என் தலை எழுத்து' என்ற பெருமூச்சும் விம்மலும் கேட்குமே தவிர, உழைப்பின் பெருமையா தெரியும்!

இலண்டனில் ஒரு சங்கம் உண்டாம்—உல்லாச புருடர்கள் எல்லோரும், ஒருநாள் கூடுவார்களாம் மனிதன் அடையும் கஷ்டம், சமத்துவ நிலை மலர்வதற்கான அவசியம், ஏழை பணக்காரன் பேதம் ஒழிய வேண்டிய முக்கியத்துவம் குறித்து ஒவ்வொருவரும் பேசுவார்களாம்—பிறகு, தத்தமது கார்களில் ஏறிக் கொண்டு, மாளிகைக்குச் சென்று விடுவார்களாம்!

அவர்களுக்கு, இதுவோர், பொழுது போக்கு.

அந்த 'உல்லாச புருடர்கள்' ரூபத்தில், ஆச்சாரியார் குழாம்' புறப்படுகிறது.

அழகான மாளிகை—மாள் கழுத்

புதிய வெளியீடுகள்

—✲—

குடும்பம்—தில்லை-வில்லாளன் 1—8—0
குடும்ப வாழ்க்கையைப் பல கோணங்களிலிருந்து ஆராயும் சிறந்த நாவல்.

கசப்பும் இனிப்பும்—ஆசைத்தம்பி 1—8—0
பல வியப்பளிக்கும் சம்பவங்கள் நிறைந்த நாவல்

மனித தெய்வம்—ஆசைத்தம்பி 1—4—0
இதன்மூலம் விவாகரத்து உரிமையும் காதல் மணமும் வற்புறுத்தப்படுகிறது.

அமிர்தசரஸ் ராணி—மாரிசாமி 1—8—0
உண்மையாக நடந்த ஒரு காதல் கொலை வழக்கு.

தொண்டா? துவேஷமா?—க. அன்பழகன் 0—8—0
நாம் பார்ப்பனரைத் துவேஷிக்கிறோமா அல்லது தமிழகத்திற்குத் தொண்டு புரிகிறோமா என்பதை விளக்கும் அரிய ஆராய்ச்சி நூல்.

அண்ணாவின் நூல்கள்

ரங்கோன் ராதா	2—8—0
காதல் ஜோதி	2—8—0
வள்ளிநாயகியின் கோபம்	1—4—0
தமிழகம்	1—0—0
சூழ்நிலை	1—0—0
வாழ்க்கைப் புயல்	0-12—0
சாது	0—8—0
ஜெபமாலை	0—8—0
மக்கள் தீர்ப்பு	0—8—0
நூல் நிலையங்கள்	0—4—0
சொல்லும் பயனும்	0—4—0

கி. ஆ. பெ. விசுவநாதம் நூல்கள்

அறிவுக்கு உணவு	0—8-0
ஐந்து செல்வங்கள்	0—8—0
தமிழ் மருந்துகள்	0—8—0
மும் மணிகள்	0—8—0

இராதாமணாளன் நூல்கள்

அரக்கு மாளிகை	2—0—0
இளவரசி	2—0—0
அன்னம்	1—0—0
சபதம்	1—0—0
பொற்சிலை	1—4—0

அச்சில்

அண்ணாவின்—மாஜி கடவுள்கள், பார்வதி பி. ஏ.

இராதாமணாளனின்—கானல்நீர்

பாரி நிலையம்,
59, பிராட்வே, சென்னை-1.

தில் வைரம்—மகனுக்குப் புதுக்கார்—மனைவியின் உடலில் லட்சக்கணக்கில் ஆபரணம்—இத்தனை சுகபோகங்களுடன், இருமல் வந்தால்—இரண்டாயிரம்! — தும்மினால் தொளாயிரரூபாய்—என்று டாக்டர்களுக்குத் தரும்வசதியோடு வாழும் பூலோகக் குபேரர்களாம் இவர்கள், உழைப்பின் உயர்வைக் குறித்து உபன்யாசிக்கக் கிளம்புகிறார்கள்!

ஊரார் இவர்களின் சூதுமதியை அறிந்து கொண்டு, தூ! தூ!! என்று காரி உமிழ்வதைக் கண்டதும், புதுப் புது 'முகமூடி' போட்டவண்ணம், பவனிவர முயல்கிறார்கள்.

குலதர்மக் கல்வித் திட்டம்—இப்போது—தொழில் கல்வித் திட்டம் என்று பறை சாற்றப்படுகிறது.

தொழில் கல்வியாம்!—எது? குழந்தைகளுக்குப் போதிப்பது. கூறுகிறார், ஆச்சாரியார்.

காம்பும், காடும், நிரம்பிக்கிடக்கும் இப்பூமியில், தொழில் எது—விளக்கம் தர முடியுமா!

பானை செய்தலும்—பாய் முடைதலும்—தொழிலா!! இந்த நூற்றாண்டில், இயந்திரங்கள் ஆங்காங்கும் புகையினைக் கப்பிய வண்ணம் பரவிக் கொண்டிருக்கும் இந்த நூற்றாண்டில், இவைதான், தொழிலா!—போதுமா, இத்தொழில் — போதுமெனில், இத்தகைய கிராமீயத் தொழிலில்,ஈடுபட்டிருப்போர், எவ்வளவு பேர்? அவர்களைத் தவிர்த்து, மத்யதர மக்கள் இருக்கிறார்களா—கோடிக்கணக்கில். அவர்களுக்கு, என்ன தொழிலைத் தருவார், ஆச்சாரியார்? அவர்களுக்கும் மேலாக, ஆடம்பரத்தோடு அமர்ந்திருக்கின்றனரே, கோடீசுரர்கள், அவர்களுக்கு என்ன தொழில்?—

இதற்கான விளக்கங்களை அவர், கூறுவதில்லை.

ஏனெனில், இது சிக்கல் நிரம்பிய பகுதி—அவர் தான் இந்தப் பகுதிக்கே விரோதி நம்பர் 1 ஆயிற்றே.

ஆயினும், தன்னுடைய சதி, முறியடிக்கப்பட்டு விட்டதென்னும் எண்ணத்தில், மக்களை ஒட்டகங்களெனஎண்ணி, மனம்போன போக்கில். புதுப்புது வியாக்யானங்களைத் தருகிறார்.

அதற்கு ஆதரவு தருவது—ஆசிரியர்கள்—டெபுடி டைரக்டர்கள்!

சர்க்காரிடம் சம்பளம் பெறும் நிலையிலிருக்கும் இத்துர்ப்பாக்கியசாலிகள், வேறென்ன செய்வர்?

இந்த வெத்துவேட்டுகள் மூலம், குழம்பிய குட்டையில், மீன் பிடிக்க எண்ணுகிறார்—ஆச்சாரியார்!

அவருடைய சதி; முறியடிக்கப்பட்டதும் — வயோதிக சுபாவத்துடன் — ஏதேதோ, பேசுகிறார்! விளக்குகிறார்!!

அத்தனையும், நாட்டுக்காக அல்ல; தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்காக.

எனவே, இதில் உண்மை இல்லை—பள பளப்புத் தெரிகிறது.

நாட்டுக்குத் தேவை, பள பளப்பு அல்ல; வாழ்வு!

அதனை நல்க, 'பள பளக்கும்' இந்த பாம்புகளால் முடியாது—முடியாது.

*

"நீர்தான் இந்தக் காரியத்தைச் செய்தீர் என்பதற்குச் சாட்சியுண்டா?"

"இல்லை"

"ஏன் இல்லை"

"நான் இந்தக் காரியத்தைச்செய்யும்போது பார்த்தவர்கள் இப்பொழுதில்லை-இறந்துவிட்டார்கள்"

"யார் அவர்கள்?"

"என்னுடைய தாய் தந்தையர்கள்"

"உம்முடைய பெற்றோர்களைத் தவிர, வேறு யாரும் நீர் செய்த இந்தக் காரியத்தைப் பார்க்கவில்லையா?"

'எனது பெற்றோர்கள் தவிரவேறு யாரும் வரமுடியாத இடத்தில்தான் நான் இந்தக் காரியத்தைச் செய்தேன்"

"அப்படிப்பட்ட இடம் எதுஎன்பதைத் தெரிவிக்க முடியுமா?"

"ஆகா!—அடுப்பங்கரை— அந்நியர்கள் நுழையக்கூடாத இடம் — அதிலும் பிராம்மணாள் சமையல் கூடத்தில் அந்நியாள் நுழையக் கூடாது—இது எங்கள் குலாசாரம்"

"சரி—அந்த அடுப்பங்கரையில் நீர் செய்த காரியம் என்ன — மறுபடியும் ஒருமுறை கூறும்."

"கூச்சமின்றிக் கூறுகிறேன்—எத்தனை தடவை வேண்டுமானாலும் கூறுகிறேன்—சமையல் வேலை,"

"இந்தச் சமையல் வேலையை நீர் ஏன் மேற்கொண்டீர்?"

"நான் மேற்கொள்ளவில்லை—கற்றுக்கொண்டேன்."

"சமையல் வேலையைப்பற்றி என்னென்ன கற்றுக்கொண்டீர்?"

உப்பு எப்போது போடுவது, புளி எப்போது போடுவது ஆகியவைகளை எல்லாம் கற்றுக்கொண்டேன்."

"அப்பொழுது உமக்கு என்ன வயது?"

"வயது சரியாக நினைவில்லை—எனது விளையாட்டுப்பருவம் என்று திட்டமாகக் கூறமுடியும்."

"விளையாட்டுப் பருவத்தில்,சமையல் வேலையையும் விளையாட்டுகளில் ஒன்றாகக் கருதிச் செய்தீர் — அப்படித்தானே!"

"விளையாட்டுக்குக் கற்றுக் கொண்டதாக வைத்துக்கொண்டாலும், அதனை, விரும்பத்தக்க ஒன்றல்ல என்று கூறமுடியாதே!"

"சரி — இப்பொழுது உமக்கு வயதென்ன?"

"எழுபத்துநாலைத்தாண்டி, எடுத்தடி வைக்கமுடியாத நிலையை எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறேன்."

"ஐயோ பாவம்! பரிதாபமாகத் தான் இருக்கிறது. என்ன செய்வது? சமையல்வேலை கற்றுக்கொள்வதுபோல், வயதையும் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ளமுடியுமா?"

"முடியாதே! வயோதிகனை வாலிபனாக்கும் வகை இருந்தால் எவ்வளவு நல்லது பாருங்கள்."

"அதிருக்கட்டும்—விளையாட்டுப் பருவத்தில் கற்றுக்கொண்ட சமையல் வேலையை உம்முடைய எழுபத்துநாலு வயதுக்குள் எப்போதாவது நடைமுறையில் செய்து பார்த்ததுண்டா?"

"அதற்குத்தான் எனக்கு வாய்ப்புக்கிடைக்கவில்லையே! படித்தேன். படித்தேன்—வக்கீலாகும் வரையில் படித்தேன்—பின்னர் அரசியல் பள்ளியில் படித்தேன் — தொடர்ந்து படித்துக்கொண்டே இருக்கிறேன்—அரசியல் பள்ளிக்கூடத்தில் உலவும்

ஏனால் எங்கே அடுப்பங்கரைக்குப் போக முடிகிறது? வேண்டுமானால், வேளுப்பதுபோலவும், ஏர் உழுவது போலவும் படம் பிடித்துப் பத்திரிகைகளில் போட்டுக் காட்ட முடிகிறதே தவிர, உண்மையில் அந்தத் தொழில்களைச் செய்யக்கூடியவாய்ப்பும் காலமும் எனக்கு எங்கே கிடைக்கிறது — பானை செய்யக்கூடப் பழகித்தான் இருக்கிறேன்—பட்டாளத்து வேலைக்குக்கூட என்னால் போகமுடியும். அந்தப் பயிற்சிகூட எனக்கிருக்கிறது— துப்பாக்கி பிடியாத கையா இது? இவை எல்லாம் இருந்தும் இந்தப் பாழாய்ப்போன அரசியல், என்னை அங்கெல்லாம் போகவிடாதபடி தடுக்கிறது.''

*

ஆம்பூர் 'கூத்தில்' பேசிய ஆச்சாரியார்,

"நான் சிறு வயதில் அடுப்பங்கரையில் சமையல் வேலைகளைக் கவனித்ததுண்டு. உப்பு எப்போது போடவேண்டும், புளி எப்போது போடவேண்டும் என்பவற்றையெல்லாம் பார்த்து அறிந்து கொண்டேன்''

என்று குறிப்பிட்டுள்ளார். செங்கற்பட்டுக் கல்விமாநாட்டில், தமக்குக் குயவன் வேலை தெரியும் என்று பேசினார். ஆம்பூர் மாநாட்டில் சமையல் வேலை தெரியும் என்கிறார். இனி அடுத்துக் கூட்ட இருக்கும் கல்விமாநாட்டில், சுகாதார முறைக்காகக் கொல்லைப்புறத்தில் அன்றாடம் செய்யப்படும் துப்புரவுப் பணியைத் தாம் தம்முடைய சிறுபிராயத்திலேயே கற்றுக்கொண்டிருப்பதாகக் கூறுவார் என்ப்தில் யாரும் சந்தேகப்பட வேண்டாம். ஏனென்றால், அவர், தாம் கற்றுக்கொண்டதாகக் கூறப்படும் எந்தத் தொழிலையும், அதாவது, உடல் உழைபபால் செய்யக் கூடிய எந்தத் தொழிலையும் செய்ததில்லை—செய்வதில்லை என்பது அவருடைய வாழ்க்கை முறையால் நன்கு தெரிகிறது. அந்தக் காலத்துப் பள்ளிக்கூட வாழ்விலிருந்து இன்றைய அரசியல் வாழ்வுவரை, அவருடைய தொழில் முறைகளை ஆராய்ந்தால், அவருக்கு, உடல் உழைப்புக்கு உரியவாய்ப்புக் கிடைக்கவில்லை என்பது தெரியும். என்றபோதிலும், அவர், மற்றவர்கள் அந்தத் தொழில்களையே கற்றுக் கொள்ள வேண்டும் — செய்ய வேண்டும் என்று வற்புறுத்துவதில் மட்டும் கண்ணுங் கருத்துமாக இருக்கிறார்.

*

தொழில்—இதில் உயர் தாழ்வு காணாதவன் தமிழன் — இன்ன தொழில் தான் இன்னாருக்கு உரியது என்ற வரம்பை ஏற்படுத்தாதவன் தமிழன்—யார் வேண்டுமானாலும், எந்தத் தொழிலை வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் செய்யலாம் என்பது தமிழன் மரபு — பிறப்பினால் ஒரு தன்மை வாய்ந்த மக்களைத் தொழிலின் உயர்வு தாழ்வைக் காட்டி வேற்றுமைப் படுத்தக் கூடாதென்பது தமிழன் கண்ட சமத்துவப் பண்பாடு.

மலமெடுப்பதும், மந்திரி வேலை பார்ப்பதும் தொழிலில் ஒரு தன்மையுடையதே. மலமெடுப்பவனுக்கும் மந்திரி வேலை பார்ப்பவனுக்கும் மக்கள்தான் சம்பளம் தருகின்றனர். இரண்டு தொழில்களும் நாட்டுக்குத் தேவை என்ற காரணத்தால், மக்களின் வரிப்பணத்தில் ஒரு பகுதி அவர்களுக்குச் சம்பளமாகத் தரப்படுகிறது. எனவே, தொழிலில் உயர்வு தாழ்வு காண்பது தமிழனுடைய பண்பாடல்ல.

ஒப்புக்கும் உபசாரத்திற்கும் தொழிலின் உயர்வைப் பற்றிப் பேசுவதும், சமயம் நேரும்போது குறிப்பிட்ட ஒரு தொழிலைச் செய்வதற்கு ஏதாவது சாக்குப் போக்குக் கூறித் தப்பித்துக் கொள்வதும் தமிழனால் சகிக்க முடியாத ஒன்றாகும்.

குலத்துக்கொரு தொழில் என்ற கொடுமை இந்நாட்டில் ஏற்பட்ட பின்னர்தானே, கோலோச்சிய தமிழன் கூலி வேலையும் கிடைக்காமல் கும்பி காயவேண்டியனானான் என்பதை, எவரே மறுக்கமுடியும்?

*

கன்னான் மகனைக் கலெக்டராக்க முயலுவதாகக் கூறும் ஆச்சாரியார், ஒரு கனபாடியின் மகனை வயலில் களை யெடுக்கும் காத்தானாக மாற்ற முடியுமா என்று கேட்கிறோம்.

அண்மையில், மன்னார்குடி என்ற ஊரில், ஏர் உழச் சென்ற சில கனபாடிகளுக்கு அக்ரகாரத்து ஆரணங்குகள் பூரணகும்பம் எடுத்து ஆராத்தி சுற்றினர் என்று ஒரு செய்தி பத்திரிகைகளில் வந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

வண்ணான் மகனை வக்கீலாக்கும் வாயளப்புக்காரர் ஏன் இந்தச் சம்பவத்தைக் கண்டிக்கவில்லை.

உழவுத் தொழிலைப் பார்ப்பனர்கள் செய்தார்கள் என்பதற்காக மேற்கொள்ளப்பட்ட மேற்படி 'திருஷ்டி பரிகாரம்' மிகவும் வெறுக்கக்கூடிய ஒன்று என்று விவேகியாம் ஆச்சாரியார் ஏன் ஒரு அறிக்கை வெளியிடவில்லை.

செய்யக்கூடாத ஒரு இழி வேலையைப் பிராமணர்கள் செய்யும்படியான 'துர்ப்பாக்கிய' நிலை ஏற்பட்டுவிட்டதென்பதைத்தானே அந்தத் 'திருஷ்டி பரிகாரம்' உலகுக்குத் தெரிவிக்கிறது.

இந்த நிலை, அதாவது, பார்ப்பனர்கள் ஏர் உழுதல் முதலான உடல் உழைப்புப் பணிகளில் ஈடுபடக்கூடாதென்ற ஸ்திரமான நிலை, நாட்டில் நல்ல முறையில் பிரசாரம் செய்யப்படுவதைப் பார்த்த பின்னரும், ஆச்சாரியார், தனக்கு, மண்பாண்டம் செய்யத் தெரியும், சமையல் வேலை தெரியும் என்றெல்லாம் ஏமாற்றித் திரிவதில், ஏதாவது பொருளோ பயனோ இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டாமா?

*

எப்பக்கம் நோக்கினாலும் எதிர்ப்புக் குரலையே கேட்கவேண்டிய நிலையைக் கொண்டுவந்துவிட்டிருக்கும் இந்த ஆரம்பக் கல்வித் திட்டம், ஒவ்வோர் சமயங்களில், அதன் கர்த்தாவான ஆச்சாரியாரை அன்புரையாலும் வரவேற்கப்படுகிறதாம். இந்த மறுக்கமுடியாத உண்மையை, ஆச்சாரியாரே ஒப்புக்கொண்டு, ஆம்பூர் மாநாட்டில் வெளியிட்டுள்ளார்.

"என்னைப்பற்றிப் பலர் அன்பு வார்த்தைகள் பேசியதைக் கேட்க மிகவும் திருப்தியாயிருந்தது''

என்று தன்னையும் மறந்த ஆனந்தத்தால் பேசியுள்ளார். ஆச்சாரியாரைப் பார்த்துப் பிறர் அன்புரை வழங்குவது அவருக்கே திருப்தியளிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறதாம்.

ஆச்சாரியார், தம்மை அன்பால் அர்ச்சிப்பது கண்டு அகமகிழ்கிறாராம் — திருப்தியடைகிறாராம்.

திருப்தி—இது வெறுப்பின் எதிர்ச்சொல்.

திருப்தியடைதல்
வெறுப்படைதல்

இந்த இரண்டு சொற்களும் ஒன்றை இன்னொன்று சந்திக்கமுடியாதவை. திருப்தி இருக்கின்ற இடத்தில் வெறுப்புக்கு வேலை இல்லை. வெறுப்பைத் திருப்தி திரும்பிப் பார்க்கவும் முடியாது.

ஆச்சாரியார், தமக்கு வழங்கப்படும் அன்புரைகளால் திருப்தியடைகிறார் என்றால், அதன் பொருள் என்ன?

ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வித் திட்டம் அனைவராலும் வெறுக்கப்படக்கூடியது என்பதுதானே அதன் பொருள்.

அப்படி இல்லை என்றால், ஆரம்பக் கல்வித் திட்டத்தை ஆதரிக்க வேண்டுமென்பதற்காகக் கூட்டப்பட்ட மாநாட்டில், அவரையும், அவருடைய திட்டத்தையும் ஆதரித்து அன்புரை வழங்கப் பலர் தயாராய் இருந்தனர் என்று, ஆச்சாரியார் தம்முடைய வாயினாலேயே கூறவேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது?

மாநாட்டில் குழுமியிருந்தவர்களில், சிலரல்ல, பலரின் அன்புரை ஆச்சாரியாருக்குக் கிடைத்ததாம்.

எல்லோருடைய ஏகோபித்த அன்புரையும் கிடைக்கவேண்டிய இடத்தில், ஏன் சிலரின் அன்புரை கிடைக்கவில்லை? அன்புரை வழங்காத அந்தச் சிலர் யார்?

ஆச்சாரியாரின் கல்வித் திட்டம் மிகவும் அக்கிரமமானது என்பது தெரிந்தவர்கள், அதிகார அம்புக்குப் பயந்து, அம்மாநாட்டில் கலந்துகொண்டபோதிலும், அவருக்கு அன்புரை வழங்க மறுத்துவிட்டனர் என்பதைத் தவிர, அந்தப் 'பலர்' 'சிலர்' என்ற சொற்களுக்கு வேறு என்ன பொருள் கூற முடியும்?

*

ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வித் திட்டம் ஒரு உதவாக்கரைத் திட்டம் என்பதை, அவரே ஒப்புக்கொள்கிறார்.

> "நான் செய்த காரியம் சரியானதென்று யாராவது புகழ்ந்தால் எனக்குச் சந்தோஷம் ஏற்படுகிறது"

என்று கூறுகிறார். அவர் செய்யும் காரியத்தை, யாராவது 'நாலு பேர்' புகழவேண்டுமாம். அப்போதுதான் அவருக்கு ஆனந்தம் பிறக்குமாம். ஒருவர் செய்கின்ற காரியம் நல்லதென்றால், அதனை எல்லோரும் அவசியம் வரவேற்பார்கள். இங்கே ஆச்சாரியாருக்கு ஏற்பட்ட சந்தேகத்திற்குக் காரணம் என்ன? அவர் செய்த காரியம் சரியல்ல என்பதாலேயே, அவர், அந்தக் காரியத்தைக் குறித்து 'யாராவது' புகழுரை வழங்கமாட்டார்களா என்று எதிர்பார்க்கிறார். கடமையை உள்ளத்தில் கொண்டு காரியமாற்றுபவன் ஒருபோதும் புகழை எதிர்பார்த்து நிற்கமாட்டான்.

தான் செய்கின்ற எந்தக் காரியத்தையும் யாராவது சரியென்றுகூறும்போது சந்தோஷம் ஏற்படுகிறதென்று பொதுவாகக் கூறிய ஆச்சாரியார், தாம்செய்த மற்றக்காரியங்களைவிட ஆரம்பக் கல்வித் திட்டம் மிக மிக மோசமானதென்பதை, அதனை, அவர், தனியாகப் பிரித்து,

> "மேல்வாரியாகப் பார்த்தால் திட்டம் நன்றாயிருக்கிறது என்று சொல்வதைக் கேட்கச் சந்தோஷம்"

என்று கூறுவதன் வாயிலாக, அத்திட்டத்தின் ஊழலை வெளியேஎடுத்துக் காட்டுகிறார். திட்டத்தை மேல்வாரியாகப் பார்த்து நல்லதென்று சொன்னால் போதுமாம், சொர்ணாபிஷேகம் செய்யப்பட்டால் ஏற்படும் சந்தோஷம் அவருக்கு ஏற்பட்டுவிடுமாம். திட்டம் நல்லதோ கெட்டதோ, அதைப்பற்றி அவருக்குக் கவலை இல்லையாம். யாராவது சிலர் புகழ்ந்தால்—நல்ல திட்டம் என்று கூறினால் — போதுமாம். திட்டம் நடைமுறையில் நன்மை உண்டாக்கக்கூடியதா? தீமை விளைவிக்கக் கூடியதா? கவலையே இல்லையாம்.

> "திட்டம் பின்னால் எப்படி நடந்தாலும்நடக்கட்டும். அதைப் பற்றிக் கவலை இல்லை, நன்றாக நடக்கும் என்று கூறுவதே சந்தோஷம்."

என்பது அறிவின் சிகரமாம் ஆச்சாரியாரின் அற்புத யோசனையும், வேண்டுகோளும். தான் செய்கிற ஒரு காரியம் பின்னால் எப்படி நடக்கும் என்ற கவலையே இல்லாமல் ஒருவன் ஒரு காரியத்தைச் செய்கிறான் என்றால், அவனைப்பற்றி அறிவுலகம் என்ன கருதும். அதுவும், நாட்டு மக்களின் பொதுநலனை முன்னிட்டுச் செய்யப்படும் ஒரு காரியம், அதன்பின் விளைவுகளைப் பற்றிச்சிறிதும் யோசியாமல் செய்ய ஒருவன் முனைந்தால், அவனை ஒரு அறிவாளி என்றோ, நாட்டுமக்களின் நலனில் அக்கறை கொண்டவன் என்றோ யாராவது கருதமுடியுமா? ஆனால் இந்த அக்கிரமத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்த ஆச்சாரியாரைமட்டும் யாரோ சிலர்புகழ்கிறார்களாம். யார் அவர்கள் என்பதை அறியும்போது நமக்கே பரிதாபமாக இருக்கிறது. ஆச்சாரியாரின் அதிகார அம்புக்கு இரையாகக்கூடாதென்று நினைக்கும் சில சர்க்கார் சிப்பந்திகள் ஆச்சாரியாரின் திட்டத்தை வரவேற்கிறார்களாம் — புகழ்கிறார்களாம். அதிலும், கல்வித்துறையில் இருக்கும் சில உயர்தர உத்தியோகஸ்தர்களே, தங்களின் எதிர்கால முன்னேற்றத்தை எதிர்பார்த்து இத்திட்டத்தை ஆதரிக்கிறார்களாம். பாவம் அவர்கள் என்ன செய்வார்கள்? வாழ்க்கைக் கப்பலைச் சிரமமின்றி ஓட்ட வேண்டுமே! திட்டம் நல்லதோ கெட்டதோ, அதுவல்லப் பிரச்னை. வாழ்க்கை வாழ்வதற்கே! அதுதான் அவர்களுடைய பிரச்னை. ஆனால், வாழ்க்கை எதற்கு என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்கள் மறந்துவிடக் கூடாது. மானத்தைக்காக்கவாழ்!உயிரைக்கொடுத்து மானத்தைக் காத்துக் கொள், 'வாழ்வாது மாயம்' என்ற மயக்கமொழி தமிழனுக்கு முற்றிலும் புறம்பானது. வாழ்வாவது மானம், இது தான் தமிழனுடைய பண்பு. இதனை ஆச்சாரியாரின் திட்டத்தை ஆதரிக்கும் அவசரத்தில் நிற்கும் அன்பர்கள்மறந்துவிடக்கூடாது.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.

திருக்குறள்

(மூலம் மட்டும்)

அடக்கவிலைப் பதிப்பு

தனிப்பிரதி 1க்கு நாலணு

ர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டது

பிழையில்லாத பதிப்பு

100 பிரதி ரூ. 21-14-0

1000 பிரதி ரூ. 187-8-0

தனிப்பிரதி வேண்டுவோர்

ஆறு அணு அனுப்பினால் புக்போஸ்டில்

அனுப்பப்பெறும்.

100க்கு மேற்பட்ட பிரதிகளுக்கு

பாகம் அட்வான்சுடன் அருகிலிருக்கும்

ரயில்வேஸ்டேஷனை தெரிவித்தால்

யில் பார்சல்மூலம் அனுப்பப்படும்.

தமிழ்நாற் பதிப்பகம்,

வசி வீடு, காஞ்சிபுரம்.

ருக்குறள் மூலமும் பொழிப்புரையும்

ந்த கிளேஸ் காகிதம், திருந்திய தப்பில்லாத அச்சு,

விரைவில் வெளிவருகிறது.

இடது பக்கம் மூலம் தனியாகவும்

வலது பக்கம் சிறந்த அறிஞரால்

எழுதப்பட்ட உரை தனியாகவும்

கண்கவர் வனப்புடையதாக

வெளி வருகிறது.

இமயம் முதல்

குமரி வரையில்

குமார விகடன்

காலண்டர்களே

குமரன் காலண்டர் தொழிற்சாலை,

60-B, செல்லுக்காரத்தெரு,

காஞ்சிபுரம்.

தபால்பெட்டி நெ. 2 தந்தி: குமரன் போன்: 60

Wrapper Printed at Kumaran Press, Kancheepuram. Phone No. 60.

Phone No. 15 Regd. No M. 4642.

கழகத் தோழர்காள்! கடமையைச் செய்வீர்!!

★ தூத்துக்குடி தோழர்கள்மீது, சதி வழக்குகளைப் போட்டிருக்கிறது, ஆச்சாரியார் அரசாங்கம்.

★ அவர்கள்மீது தொடர்ந்துள்ள வழக்குகளை எதிர்த்து வாதாட, பெருந்தொகை தேவை.

★ ஒவ்வொருவரும் தம்மாலியன்றளவு, உதவி செய்யுங்கள்.

★ கண்ணீரால் கழகத்தை வளர்த்தோம்! செந்நீர் சிந்தினர் தியாக வீரர்கள்!!

★ இன்று வழக்குகளை வீசி, அலைக்கழிக்கிறது அதிகாரத் தர்பார்.

★ அக்கொடுமையினின்றும் நம் தோழர்களை மீட்க

ஒவ்வொருவரும் உதவி புரியுங்கள்!

அ. பொன்னம்பலனார்,
'தூத்துக்குடி வழக்குநிதி'
அறிவகம்
இராயபுரம், சென்னை,
என்ற முகவரிக்கு அனுப்பித் தாருங்கள்.

தி. மு. க.